## தேவனுடைய கருவிகள் (தலைவர்கள்) (எரே 51:20; ஏசா 49:2)

தேவனுக்கு ஒவ்வொரு காலத்திலும் (யுகத்திலும்) அவருடைய தீர்மானத்தை நிறைவேற்ற கருவிகள் இருந்தார்கள். (உ.தா) தேவனுடைய மனுஷர்கள், இஸ்ரவேல் ஜனங்களை வழி நடந்த மோசேயும், ஆரோனும், பின்பு யோசுவாவும், நியாயதிபதிகள், தீர்க்க தரிசிகள், ராஜாக்களும் இருந்தார்கள்; புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலர்கள், மூப்பர்கள், போதகர்கள், சுவிசேஷகர்கள் போன்ற நிலைகளையும், மனிதர்களையும் தேவன் ஏற்ப்படுத்தினார்.

### தேவன் மனிதர்களை பயன்படுத்துகிறார்

தேவனுக்கு மனிதர்கள் தேவையா? தேவன் சர்வ வல்லமையுள்ளவர், வானத்தையும் பூமியும் அண்டசாரசரத்தையும் படைத்தவர் (எரே 10:10; நெகே 9:6). நாம் நம்முடைய கண்களினால் பார்க்க கூடிய, பார்க்க முடியாதா? எல்லா காரியங்களையும் தேவன் அவருடைய வார்த்தையினால் உண்டாக்கினார் (எபி 11:3; யோவா 1:1-3).

பூமியிலிருந்து நிலாவின் தூரம் 3,84,400 Km ஆகும். பூமியானது சூரியனிடமிருந்து 150 மில்லியன் தொலைவில் அமைத்திருக்கிறது. சூரியனிலிருந்து சூரிய ஒளியானது $3\times10^8$ m/s என்ற வேகத்தில் பயணிக்கிறது, சூரிய ஒளியானது பூமியை வந்தடைய எடுத்துக்கொள்ளும் நேரம் 8 நிமிடங்கள், சூரியனிடம் இருந்து வரும் ஒளியானது நிமிடத்திற்கு 300,000 km வேகத்தில் பயனிக்கிறது. தேவனால் படைக்கப்பட்ட இந்த காரியங்கள் எல்லாம் பார்க்கும் போது தேவனுடைய வல்லமை எவ்வளவு பெரியது என்பதை குறித்து ஆச்சரியப்படுகிறோம், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் சர்வ வல்லமையுள்ளவர், அவர் மகா பெரியவர் (எரே 32:17-19, 27)

தேவனின் கிரியைகளையும், படைப்புகளை நாம் பார்க்கும் போது நாம் ஒன்றுமேயில்லை என்பதை மாத்திரம் நாம் உணருகிறோம் (சங் 8:3-4). இப்படி சர்வ வல்லமையுள்ள தேவன் ஏன் மனிதர்களை பயன்படுத்துகிறார்? ( 2தீமோ 2:21) தேவனுக்கு மனிதர்கள் தேவையா? ஏசாயா 6:8-யில் "யாரை நான் அனுப்புவேன் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தை" ஏசாயா கேட்டார்; இதைப்போலவே இயேசுவும் மத் 9:38 -யில் வேலையாட்களை அனுப்பும் படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

### கனமான பாத்திரமாக மாறுதல்

உண்மையில் தேவனுக்கு மனிதர்கள் தேவை என்பதைவிட மனிதர்களுக்கு தேவன் தேவை என்பது தான் உண்மை (ரோம 11:35). தேவன் தன்னுடைய வேலைக்கு பலவீனமான மனிதர்களை பயன்படுத்துகிறார் என்பதை குறித்து பவுல் கூறுவதை நாம் 1 கொரிந்தியர் 1:21-31 -யில் வாசிக்கிறோம், இதை குறித்து "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்" என 1 கொரி 1:29 -யில் வாசிக்கிறோம். தேவன் ஞானிகளை வெட்கப்படுத்தும் படிக்கு அற்பமான மனிதர்களை பயன்படுத்துகிறார், அவர்களை கொண்டு எல்லாம் செய்கிறார், தேவனுடைய தலைவர்கள் என்பவர்கள் தேவனுடைய கருவிகள் மாத்திரமே.(எரே 51:20-23; ஏசா 10:15) தேவன் இப்படி கனவீனமான பாத்திரங்களை பயன்படுத்தி பெரிய காரியங்களை செய்வதன் மூலம் அந்த கனவீன பாத்திரமாய் இருக்கிறவர்கள் கனமான

பாத்திரமாய் மாறுகிறார்கள், நாம் ஒன்றுமே இல்லை எல்லாம் தேவனே. பவுலுடைய வார்த்தைகளை கவனியுங்கள். ***“எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது” (2 கொரி 3:5).***

## தேவனுடைய தலைவர்கள் (கருவிகள்) என்ற வகையில் நாம் ( 1 பேது 2:5,9)

இன்று தேவன் பயன்படுத்தும் கருவிகளாக கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கிறோம், நாமே தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட அவருடைய சந்ததியாக இருக்கிறோம் என்பதனால் இந்த பாடமானது, நாம் தேவனுடைய தலைவர்களாக இருக்க நம்முடைய ஆளுமை, குணங்கள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை கற்றுக்கொள்ளவும், நடைமுறை வாழ்க்கையில், இந்த பாடங்களை பயன்படுத்தி தேவனுடைய மனுஷனாகவும், தேவனுடைய தலைவராகவும் இருக்கவும், நாம் முயற்சி செய்யும் வகையில் இந்த பாடமானது நமக்கு கொடுக்கப்படுகிறது.

நீங்கள் தேவனுடைய தலைவராக (கருவிகளாக) இருப்பீர்களா?

## மாற்றம் ஏற்படும் நேரம்

வேதாகமத்தில் சிறந்த தேவனுடைய தலைவர்களாய் இருந்தவர்கள், தங்களுடைய தேவனின் வேலை செய்வதற்கு முன்பு, அவர்கள் சாதாரண மனிதராகவோ அல்லது அவர்களுடைய வேலைகளை செய்து கொண்டு வெளியே தெரியாதவர்களாக, பயந்தவர்களாகவும், பொறுப்பு இல்லாதவர்களாகவும், குழந்தைகளைப்போலவும், அறியாமையுடையவர்களாகவும் இருந்தனர், ஆனால் அவர்கள் மாறினார்கள் பொறுப்பு இல்லாதவர் பொறுப்புடையவர்களாகவும், கோழையாக இருந்தவர்கள் தைரியசாலியாகவும் மாறினார்கள், அறியாமையில் இருந்தவர்கள் அறிவை அடைந்து அதை எல்லா மனிதர்களுக்கு கொண்டு சென்றனர், அவர்கள் மாறினார்கள், சாதாரண மனிதர்களாய் இருந்தவர்கள் தேவனுடைய தலைவர்களாய் மாறினார்கள், இதற்கான காரணம் என்ன என நீங்கள் நினைக்கிறீர்கள்?

உதாரணம்:

1. பேதுரு – கோழையாக இருந்தான் (மத் 14:30; மத் 26:69-75), ஆனால் தைரியமுள்ளவனாக மாறினான்.
2. பவுல் – கிறிஸ்துவுக்கு விரோதமாய் செயல்பட்டவர், கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் இழக்க தயாரானார் (கலா 1:22-24)
3. யோவான் – சுயநலமானவர் (மத் 20:19-21), அன்பின் சீஷனாக மாறினார் (வெளி 1:9)
4. இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் (ரோம 12:2)

தேவனுடைய நல்ல தலைவராக இருப்பதற்கு நீங்கள் உங்களை நீங்களே மாற்றிக்கொள்வீர்களா? ஒரு போர்வீரன் தன்னை எப்படி மேம்படுத்தி கொள்ள வேண்டுமோ அதைப்போல; உங்களை நீங்களே தேவனுடைய விருப்பத்தின் படி மாற்றி கொள்வீர்களா? (ஏசா 64:8)

**நான் ஏன் தேவனுடைய தலைவராக மாற / இருக்க வேண்டும்?**

I. பதில் எளிதானது :

**அ. அது தேவனுடைய திட்டம்: ( 1பேது 2:9; எபே 3:9,10)**

a. நீங்கள் தலைவராக இருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார், (தலைவர் = வழி நடத்துபவர்)

**b. நாம் சபையின் அங்கமாய் இருப்பதால், சபையின் வளர்ச்சியை தலைமையேற்று வழிநடத்த வேண்டும் (எபே 4:11-16)**

1. நீங்கள் மூப்பராக இருக்கலாம் ?
2. நீங்கள் சுவிசேஷகராக இருக்கலாம்?
3. நீங்கள் போதகராக இருக்கலாம்?
4. நீங்கள் பெண்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்துபவராக இருக்கலாம் ? (எபே 4:16= தீத்து 2:5; 1 தீமோ 5:10)
5. நீங்கள் வாலிபரை/குழந்தைகளை கிறிஸ்துவுக்குள் நடத்துகிறவர்களாக இருக்கலாம்? (1 தீமோ 4:12; 2 தீமோ 2:22)
6. நீங்கள் உபசரிக்க கூடியவராகவும் இருக்கலாம் ? ( 1பேது 4:9)
7. உங்களுடைய திறமைக்கு தக்கதாக சபையின் வளர்ச்சியில் பங்காற்றலாம் (ரோம 12:5,6)
8. கிறிஸ்துவின் சரீரமான சபையில் தாம் அவயமாய் இருப்பதால் நம்முடைய திறமைக்கு தக்கதாக வேலை செய்ய வேண்டும், இதற்கு தலைமைத்துவ பண்புகளை கற்றுக்கொள்ள வேண்டும்

**c. உங்களுக்கு ஒரு குடும்பம் இருக்கிறது, குடும்பத்தை வழி நடத்துகிற நீங்கள் தேவனுடைய தலைவராக மாறுகிறீர்கள்; ஆகவே நீங்கள்/நாம் தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும் ( 1 தீமோ 3:4)**


1. கணவன் (எபே 5:29; 1 கொரி 11:3)
2. மனைவி ( 1தீமோ 5:10,14)

**d. இந்த சமுதாயத்தில் நாம் தேவனுடைய பிள்ளைகளாய் வாழ நாம் தேவனுடைய தலைவர்களாய் அவருடைய தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும், தேவன் நம்மை ஆளக்கூடியவர்களாய் மாற்றியிருக்கிறார், அதை ப்போலவே நாம் இருக்க வேண்டும் (பிலி 2:14,15: 1 பேது 2:21: வெளி 1:6)**

1. நம்மை தேவன் ராஜாக்களாய் ஏற்படுத்தியிருக்கிறார் (வெளி 5:9,10)
2. நாம் அடிமைகள் இல்லை, சுயதீனமுடையவர்கள் (கலா 5:1)
3. நாம் ஆளக்கூடியவர்களாய், இந்த பூமியில் நல்ல கிறிஸ்தவராய் வாழ வேதம் காண்பிக்கும் தலைமைத்துவ பாடத்தை கற்றுக்கொண்டு தேவனுடைய தலைவர்களாய் மாற வேண்டும்.

## தலைவர்களாக மாற (அ) இருக்க விரும்பாததற்கு என்ன காரணம்?

1. **தைரியமின்மை/ தைரிய குறைவு:**
   a. தலைவர்களாய் வழி நடத்துவதற்கு தைரியம் மிகவும் முக்கியமானது (சங் 78:9)
      i. நூறு நபர்கள் இருக்கும் கூட்டத்தில் ஒருவராக இருக்க தைரியம் வேண்டாம், தனியாக முன்பு நிற்க தைரியம் வேண்டும்.
      ii. நாம் சிங்கத்தைப் போல தைரியமாய் நிற்க வேண்டும். (நீதி 28:1)
      iii. தலைவர்களுக்கு கண்டிப்பாக எதிர்த்து நிற்பவர்கள் இருப்பார்கள், அவர்களால் தலைவர்கள் தள்ளப்படலாம், மோசமாக பார்க்கப்படலாம், முறுமுறுக்கப்படலாம் மற்றும் தலைவரெகளுக்கு விரோதமாக செயல்படலாம், ஆனால் தலைவர் தைரியமாய் அதை எதிர் கொள்ள வேண்டும்.



   b. **பயம்**
      i. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்க வில்லை ( 2தீமோ 1:7)
      ii. யாராவது, ஏதாவது கூறி விடுவார்களோ என்கிற பயம்
      iii. தவறாக போய்விடுமோ என்கிற பயம்
      iv. மற்றவர்கள் என்னை பற்றி என்ன நினைப்பார்கள் என்கிற பயம்.
      v. இப்படிப்பட்ட பயங்களை நாம் கடந்து வர வேண்டும், இவைகளை நாம் ஜெயம் கொள்ள வேண்டும் (வெளி 21:7)
2. **சுயம் (அர்ப்பணிப்பு செய்யும் மனப்பான்மையின்மை):**
   a. தலைவர்கள் தியாகம் (அர்ப்பணிப்பு) செய்ய வேண்டும்
      i. அர்ப்பணிப்பு – முக்கியமானது என நம்பும் ஒன்றிற்குத் தனது நேரத்தையும், ஆற்றலையும் கொடுக்க விரும்புதலே அர்ப்பணிப்பு ஆகும்
   b. அர்ப்பணிப்பு செய்ய சுயம் தடையாக இருக்கிறது.
      i. நம்முடைய தலைவராய் இருக்கிற இயேசு நமக்காக சுயத்தை இழந்தார். (எபி 12:2; 2 கொரி 8:9)
      ii. சுயத்தின் மீது கவனமாயிருப்பது தன்னுடைய நோக்கத்தை அழித்துபோடும் என்பதை இயேசு அறிந்திருத்தார் (மத் 16:23,24)
      iii. பவுல் சுயத்தை இழந்தார் (கலா 2:20; பிலி 3:7-8)
      iv. ஒரு தலைவனாக, உங்கள் சுயத்தை காட்டிலும் மேலான ஒரு நோக்கத்திற்காக உங்களை ஒப்புக்கொடுங்கள் ( 2 கொரி 4:11)

v. உதாரணம்

1. நாபால் மோசமான சுயநலவாதியாக இருந்தான் (1 சாமு 25:4-11), ஆனால் அபிகாயில் அப்படியில்லை நல்ல தலைவியை போல அபிகாயில் செயல்ப்பட்டாள் ( 1 சாமு 25:14-33)

**3. தன்னம்பிக்கையின்மை:**

a. சில நேரங்களில் கிறிஸ்தவர்கள் தான் ஒரு தேவனுடைய தலைவன் (கருவி) என்பதை ஏற்றுக்கொள்ள தயங்குகிறார்கள்

b. ஆராதனையில் முன்பு வந்து செயல்பட, நடத்த தயங்குகிறார்கள்.

c. நம்பிக்கையின் அடிப்படையில் மக்கள் தலைவர்களை தேர்ந்தெடுக்கின்றனர்.

d. நாம் சந்தேகப்படுகிறவர்களாய் இருக்க கூடாது

i. பவுலைப்போல இருக்க வேண்டும் (பிலி 4:13)

ii. மோசேயை போல இந்த காரியத்தில் நாம் இருக்க வேண்டாம் (யாத் 4:13)

iii. கிதியோன் போலவும் இருக்க வேண்டாம் (நியா 6:13-17)

iv. ஏசாயாவை போல இருக்க வேண்டும் (ஏசா 6:8)

e. மற்றவர்கள் சந்தேப்படுகிறவர்களாக இருக்கின்ற நேரத்திலும், நல்ல தலைவர்கள் எதையும் செய்ய முடியும் என்ற எண்ணம் உடையவர்களாய் இருக்க முடியும்.


i. உதாரணம்: காலேபும், யோசுவாவும் (எண் 13:30)

ii. நாம் மனிதர்களுக்கு பயப்பட கூடாது (நீதி 29:25)

1. உதாரணம்: பவுல் (பிலி 1:20)

## தலைவர்களாய் மாற (அ) இருக்க தவறான காரணங்கள்

**1. ஆளுகை செய்ய விரும்புதல் (BOSS)**



a. முதன்மையாயிருக்க விரும்புதல் ( 3யோவா 9,10)

i. பரிசேயர்கள் (மத் 23:2-8)

ii. மோசமான தலைவர் (ஏசா 56:10-12)

b. தலைவர்கள் என்பவர்கள் கட்டளைப்போடுகிறவர்களாக இல்லாமல்; அதை மாதிரியாக காண்பிக்க வேண்டும்

i. நம்முடைய தலைவவரே சிறந்த உதாரணம் (மத் 20:28)

ii. சபையில் மூப்பர்கள் சபைக்கு மாதிரியாக அதை நடத்த வேண்டும் (1 பேது 5:2-3)

c. மோசமான தலைவர்களுக்கு உதாரணம்

i. யெரொபெயாம் ( 1இராஜா 12:26-30)

ii. உசியா (2 நாள 26:16-19)

d. நாம் நம்மை பின்பற்றுபவர்களை யோசிக்க வைக்க வேண்டும், அவர்களை ஆடுகளைப்போல நடத்த கூடாது.

2. **புகழ்ச்சியை விரும்புதல்:**
    a. கூட்டத்தில் தலைவராய் இருப்பதால், அவர்களின் மூலமாய் கிடைக்கும் துதியை விரும்புதல் (கலா 5:26, பிலி 2:3)
        i. உதாரணம்: அப்போஸ்தலர் 24:1-4
        ii. உதாரணம்: யூதா 16
            1. தற்பொழிவை விரும்புகிறவர்கள் அதற்காகவே செய்லபடுகிறார்கள்.
    b. பவுல் தானும், தீத்துவும் பொலிவுக்காக வேலை செய்யவில்லை என்பதை தெளிவுப்படுத்துகிறார். ( 2 கொரி 12:17-18)
        i. பவுலின் வார்த்தைகளை கவனியுங்கள் ( 1கொரி 4:3-5)
        ii. பவுலின் செயல்களை கவனியுங்கள் (அப் 14:14,15)
        iii. அப்போஸ்தலர்கள் (அப் 5:41)
    c. ஆனால் சிலர் தற்பொழிவுக்காகவும், புகழ்ச்சிக்காகவும் மட்டுமே செயல்படுகிறார்கள்
        i. பரிசேயர்கள் (யோவா 12:42,43)
        ii. கோராகு (எண் 16:1-10,11,19)
        iii. ஏரோது (அப் 12:21-23)
        iv. நேபுகாத்நேச்சார் (தானி 4:30-33)
    d. உண்மையாய் தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களுக்கு புகழ்ச்சி, தேவனால் அவர்களுக்கு கிடைக்கும் (2 கொரி 10:17,18; மத் 25:21)
3. **கட்டாயம் பண்ணப்படுதல்**:




    a. பொறுப்பை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்படல், சூழ்நிலைகள், பிற நபர்களின் வற்புறுத்தல்.
        i. மூப்பர்கள் விருப்பத்தோடு வேலை செய்ய வேண்டும் ( 1 தீமோ 3:1-5; 1 பேது 5:1-3)
        ii. விருப்பமில்லாமல் ஒருவர் தன்னுடைய வேலையை நேர்த்தியாய் செய்ய முடியாது.
        iii. பவுல் தன்னுடைய இலக்கை தொடர ஆசையாய் இருந்தார், (பிலி 3:12); அதினால் நேர்த்தியாய் செய்து முடித்தார் ( 2திமோ 4:7)
    b. ஆசையில்லை என கூறி தன்னுடைய பொறுப்பை செய்யாமல் இருக்கலாமா?
        i. இது சோம்பேறிதனம் (மத் 25:20)
        ii. தன்னுடைய கடமையை செய்ய வேண்டும் ( 1 கொரி 9:17)
        iii. மோசே நல்ல உதாரணம் (அப் 7:25,35-38)
    c. உதாரணம்: தாவீது தேவனுடைய ஆலயத்தை கட்ட ஆசைப்பட்டான் ( 2 நாள 22:6-7); ஆனால் தாவீதினால் கட்ட முடியவில்லை, அவனுக்கு பதிலாக அவனுடைய மகன் அதை கட்டுவான் என தேவன் கூறினார், ஆனால் தாவீது தான் மரிப்பதற்கு முன்பே தேவனுடைய ஆலயத்திற்கு தேவையான எல்லாவற்றையும் தயார் செய்தான். இதற்கு தாவீதை தூண்டியது அவனின் ஆசை ( 1நாள 22:11-19; 1 நாள 28:19-21; 1 நாள 29:1-16


**நல்ல தலைவர்களிடமிருக்க வேண்டிய சில பண்புகள்**

மோசே ஜனங்களின் அதிபதிகளை ஏற்ப்படுத்தினதிலிருந்து ஆவிக்குரிய தலைவர்களின் சில பண்புகள் நம்மால் புரிந்துக்கொள்ள முடிகிறது (யாத் 18:18-22)

1. **குழுவாக இணைந்து வேலை செய்தல் (யாத் 18:18; நீதி 11:14: நீதி 15:22)**
    a. மோசேயின் மாமனாகிய எத்திரோ? மோசேயிடம் ஒருவராய் அதை செய்ய உம்மால் கூடாது என கூறி குழுவாக வேலை செய்வதின் பலத்தை மோசேக்கு புரிய வைத்தார் (யாத் 18:23-26)
    b. புதிய ஏற்பாட்டில் சபையில் மூப்பர்கள் ஒன்றுக்கு மேற்ப்பட்டவர்கள் இருந்தார்கள் என பார்க்கிறோம். இது ஒரு குழுவாக வேலை செய்வதன் முக்கியத்துவத்தை காண்பிக்கிறது (அப் 14:22; தீத்து 1:5)
    c. பவுலுக்கு ஊழியத்தில் உதவி செய்ய அநேகர் இருந்தார்கள் (ரோம 16:13-16)
    d. இயேசு கிறிஸ்து ஒரு சிறந்த குழுவை ஏற்ப்படுத்தினார் (லூக் 6:13-16)



2. **சரியான வழியை காண்பிக்க வேண்டும் (யாத் 18:20)**
    a. சரியான பாதையில் வழி நடத்தல் என்பது மிகவும் முக்கியமானது, வசனமே நம்மை சரியான பாதையில் நடத்தும் (சங் 119:105)
    b. நல்ல தலைவன் வழியை காண்பிக்கிறவனாக இருக்க வேண்டும்.
        i. இயேசு கிறிஸ்து (வெளி 7:14)
        ii. அப்போஸ்தலர்கள் (பிலி 3:17)
    c. தலைவன் நேவிகேட்டரைப் (NAVIGATOR) போல செயல்பட வேண்டும்
        i. இலக்கை நோக்கி வழிநடத்தல்
        ii. உதாரணம்
            a. ஆசா (2 நாளா 15:1-19; 2 நாள 14:2-7)
            b. யோசியா (2 இராஜா 22:8-13; 2 இரா 23:1-3)
            c. எலியா ( 1இராஜா 18:21,22,39)
        iii. தேவனுடைய ஊழியர்களாக தேவனிடத்தில் மற்றவர்களை நெருங்குவதற்கான வழியை நாம் காண்பிக்க வேண்டும். (2 கொரி 5:20)



3. **தேவனுக்கு பயந்தவர்களும், உண்மையுள்ளவர்கள் (யாத் 18:21)**
    a. ஆவிக்குரிய தலைவர்களாய் தேவனுக்கு பயந்து , உண்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (யோபு 1:1)

b. பின்பற்றுபவர்கள், தலைவர்களிடம் எதிர்பார்க்கும் குணம் நேர்மை மற்றும் உண்மையாக இருக்கிறது (நீதி 24:24; நீதி 28:6)

c. இந்த உண்மை தான் ஜனங்களுக்கு இந்த தலைவரை பின்பற்றலாம் என்கிற நம்பிக்கை கொடுக்கிறது.

   i. மோசமான உதாரணம்: ஏலியின் குமாரர் (1 சாமு 2:12,17,23)

   ii. மூப்பர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயும், யோக்கியதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் ( 1 தீமோ 3:2)

   iii. தேவனுடைய தலைவர்களாய் நாம் வழி நடத்துகிற நிலையில் இருக்கிறோம் என்பதினால் நாம் நேர்மை உடையவர்களாய் இருக்க வேண்டும்.

**4. திறமையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (யாத் 18:21)**

a. தேவனுடைய தலைவர்களாய் நம்முடைய திறமைகளை நாம் தேவனுக்காக பயன்படுத்த வேண்டும்.

   i. உதாரணம்: தாவீது (சங் 78:70-72)

   ii. மூப்பர்கள் போதகசமர்த்தராய் இருக்க வேண்டும், கண்டனம் பண்ண வல்லவர்களாய் இருக்க வேண்டும் ( 1 தீமோ 3:2; தீத்து 1:9)

   iii. ஊழியர்கள் (2 தீமோ 2:24-26)

b. நல்ல தலைவர்கள் தன்னுடைய திறமைகளை வளர்த்து கொண்டே செல்வார்.

**5. கவனிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும் (யாத் 18:22)**

a. கவனித்தல், கேட்டல் (அ) கண்காணித்தல்

b. தன்னை பின்பற்றுபவர்களை கவனித்தல் என்பது, அவர்கள் விசாரிப்பது மிகவும் அவசியமான பண்பாக இருக்கிறது என்பதோடு அவர்களை புரிந்துக்கொள்ள உதவும்.

   i. உதாரணம்: எண் 27:16, 17

   ii. மூப்பர்கள் (1 தீமோ 3:1; 1 பேது 5:3).

# பாடம் - 1

## வேதாகமத்திலிருக்கும் சிறந்த தலைவர்களிடமிருந்து நடைமுறை வாழ்க்கைக்கும், ஊழியத்திற்குமான தலைமைத்துவ பாடங்கள்

வேதாகமானது தேவன் எப்படிப்பட்ட தலைவர்களை விரும்புகிறார் என்பதற்கான உதாரணங்களோடும், வரைக்குறிப்புபோடும் நிறைந்திருக்கிறது, தேவனுடைய தலைவர்களாயிருந்த சில நபர்களையும் அவர்களின் வாழ்க்கையை நாம் பார்க்கிறதின் மூலம் நம்முடைய வாழ்க்கைக்கான நடைமுறை பாடங்களை கற்றுக்கொண்டு, தேவனுடைய தலைவர்களாய் வாழ முடியும்.

## நெகேமியா

**பிண்ணனி:**

1. நெகேமியா எருசலேமின் மதில்களை கட்டுவித்தவர் என்று பொதுவாக அறியப்படுகின்றார்; ஆனால் அதற்காக அவர் பல கடினமான செயல்களை செய்தார்.
2. எழுபது வருட அடிமைத்தனத்தின் பின்பு யூதர்கள் எருசலேமிற்கு திரும்பி சென்ற நேரத்தில் இருந்த தலைவர்களில் ஒரு தேவனுடைய தலைவர் தான் நெகேமியா
3. பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து செருபாபேல் மற்றும் யோசுவா அவர்களின் தலைமையில் முதலில் 50,000 யூதர்கள் எருசலேமுக்கு திரும்பினார்கள்
4. எஸ்தருடைய காரியங்களுக்கு பின்பு ஏறக்குறைய 35 வருடத்திற்கு பின்பு நடந்த சம்பவங்கள் இவைகள் (எஸ் 1:2)
5. நெகேமியாவிற்கு முன்பே எஸ்றா செயல்பட தொடங்கியிருந்தார்.
6. நெகேமியா சூசான் அரமனையில் ராஜாவுக்கு பானபாத்திரக்காரனாயிருந்தான் (நெகே 1:1; 11)
    a. பானபாத்திரக்காரனின் வேலை திராட்ச ரசத்தை ராஜாவிற்கு கொடுப்பது, இந்த நிலை நம்பிக்கைகுரிய இடமாக இருந்தது (நெகே 2:1); ராஜாவின் பானத்தில் வேஷம் இருக்கிறதா? என பார்த்து அவனுது உயிரை காப்பாற்றுவது பானபாத்திரக்கானின் வேலையாக இருந்தது.

### I. கனவீனமான பாத்திரத்திலிருந்து; கனமான பாத்திரமாக மாறுதல் (2:17-20)

1. **நெகேமியா ராஜாவின் முன்பு பானபாத்திரக்காரனாயிருந்தான் (1:11)**
    a. பானபாத்திரக்காரனின் வேலை அர்த்தமில்லாததாக இருந்தது. ராஜாவாகிய அர்தசஷ்டாவின் முன்பு மதுபானத்தை வைத்துக்கொண்டு இருப்பது அந்த வேலையா இருந்தது(2:1,2).
    b. இராஜாவின் மதுபானத்தில் விஷம் இல்லாமல் இருப்பதாக பார்த்துக்கொள்வது; இவருடைய வேலையாக இருந்தது.
2. **மாற்றம் ஏற்படும் நேரம் (1:1-11)**
    a. நெகேமியாவை உடைத்தது என்ன? (1:3)

i. ஜனங்களின் மோசமான நிலைமையும், எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது என்கிற செய்தியை கேட்ட நெகேமியா அழுது துக்கித்து, உபவாசித்து பரலோக தேவனை நோக்கி ஜெபம் செய்தான் (வச 4)

ii. பேதுரு ஏன் மனங்கசந்து அழுதான்? (லூக் 22:61,62); இயேசு கிறிஸ்து ஏன் எருசலேமுக்காக கண்ணீர் விட்டார்? (லூக் 19:41)

iii. **அன்பு;** அன்பு என்பது வெறும் வார்த்தையாகவும், உணர்வாய் இல்லாமல் செயலாய் இருக்கிறது(பிலி1:9; பிலி 4:14-19; 1 யோவா 3:13)

iv. தலைமைத்துவத்தின் இருதயமாய் இருப்பதே அன்புதான், இதுதான் தலைவர்களுக்கும், பின்பற்றுபவர்களுக்கும் ஒரு பிணைப்பை ஏற்படுத்துகிறது (கொலோ 3:14; கொலோ 2:2)

v. அன்பு என்பது தான் தலைவர்களை தியாகம் செய்யவும், சோர்வான நேரத்தில் தாங்கி உற்சாகம் செய்யவும் உதவுகிறது, அன்பு கல்லான இருதயத்தை உடைக்க கூடியதாக இருக்கிறது.

   1. உதாரணம்: பவுல் ( 2 கொரி 5:14)

vi. தேவனுடைய ஊழியராய் நாம் ஊழியம் செயவதற்கு நம்மை தூண்டுவது அன்பாகவே இருக்க வேண்டும் ( 1கொரி 16:14). அன்பே இயேசுவை தன்னுடைய மேலான நிலையிலிருந்து இறங்கி வர செய்தது, அதே அன்பு தான் நம்மையும் தேவனுடைய ஊழியத்தை செய்யவும், நம்மை தேவனுடைய தலைவர்களாய் செயல்படவும் செய்ய வேண்டும்.

**3. தேவனுடைய தலைவர்களாக நமக்கான உதவிக்காக நாம் தேவனிடம் ஜெபிக்க வேண்டும் (1:5-2:8)**

a. நெகேமியா தன்னுடைய விருப்பம் மற்றும் உதவிக்காக தேவனிடம் ஜெபம் செய்தார் (1:9; 2:4-8)

b. தேவன் நெகேமியாவின் ஜெபத்தை வாய்க்க செய்தார் (2:8)

**c. தேவன் நம்முடைய சகாயர் (எபி 13:6; சங் 124:8)**

i. தலைவர்களாய் நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் நம்முடைய இலக்கை அடைய தேவனிடத்தில் நாம் உதவி கேட்க வேண்டும். (பிலி 4:6)

   1. உதாரணம்: இயேசு கிறிஸ்து (லூக் 22:42,43)
   2. உதாரணம் : பவுல் (எபே 6:18-20)

ii. நம்முடைய ஜெபத்தின் வல்லமையை நாம் புரித்துக்கொள்ள வேண்டும், நாம் நினைக்கிறதற்கும் மேலாக நம்முடைய ஜெபம் வல்லமை வாய்ந்தது. (யாக் 5:16)



1. உதாரணம்: ஆசாவின் ஜெபம் (2 நாளா 14:8-15)
2. உதாரனம் : யோசபாத்தின் ஜெபம் (2 நாள 20:5-12; 23)

iii. நம்முடைய ஜெபங்கள் சர்வ லோகத்தின் தேவனுக்கு முன்பாக எழும்புகின்றன. (வெளி 5:8; 8:3,4).

**iv. இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டும் (1 தெச 5:17)**

1. இயேசு இராமுழுவதும் ஜெபித்தார் (லூக் 6:12)
2. சாமுவேல் இராமுழுவதும் ஜெபித்தார் ( 1 சாமு 15:11)
3. பவுல் தெசலோனிக்கேயரின் சூழ்நிலைக்காக இரவும் பகலும் ஜெபித்தார் ( 1தெச 3:10)
4. தேவன் நம்முடைய ஜெபங்களை கேட்க எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார் (லூக் 18:1-7; 1 பேது 3:12)

**4. இலக்கை தீர்மானித்தல்: (2:17-20)**


a. நெகேமியா எருசலேமிற்காக தான் செய்ய வேண்டிய காரியங்களை தன் மனதில் வைத்திருந்து (2:12); அதை தீர்மானமாய் எடுத்தான் (2:17-20)

b. இதுவரை அர்த்தமில்லாத வாழ்க்கையை வாழ்ந்த நெகேமியா, தன்னுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய அர்த்தத்தை கொடுக்கும், ம்ற்றவர்களுக்கும் பிரயோஜனமான இலக்கை அவர் எடுத்தார் (2:18-20), கனவீனமான பாத்திரமாக இருந்த நெகேமியா எஜமானுக்கு உபயோகமான, கனமான பாத்திரமாக மாறினார் ( 2 தீமோ 2:21).

i. உதாரணம்: அந்தியோகியா சபையார் சரியான இலக்கை தீர்மானம் செய்தனர் (அப் 11:29-30)

ii. உதாரணம்: பவுலுக்கு இலக்கு இருந்தது (அப் 26:10-18)

iii. உதாரணம்: இயேசு தன்னுடைய இலக்கை செய்து முடிந்தார். (1 பேது 3:18)



iv. உதாரணம்: எஸ்றா (எஸ்றா 7:10)

c. இலக்குகளே நம்முடைய வாழ்க்கைக்கு அர்த்ததை கொடுக்கும்.

i. சரியான இலக்கு இல்லாதவர்மிருகத்தைப்போல் வாழ்க்கின்றனர் (ஏரே 2:23)

d. நம்முடைய வாழ்க்கையில்,நம்முடைய இலக்கானது, தேவனுக்கு பிரயோஜனமானதாக இருக்க வேண்டும், நமக்கான இலக்கை தேவன் தீர்மானித்திருக்கிறார்.

i. சபைக்கு ஒரு இலக்கு இருக்கிறது (எபே 3:9,10)


ii. தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு இலக்கு இருக்கிறது (எபே 5:21; மல் 2:15)

iii. சமுதாயத்தில் நான் கிறிஸ்தவனாய் வாழ்வதற்கும் இலக்கு இருக்கிறது (பிலி 2:13; 1 கொரி 9:24,25)

e. நம்முடைய இலக்குகளை அடைய நாம் தேவனை சார்த்திருக்க வேண்டும்.

## II. தடைகளை மேற்க்கொள்ளுதல் (நெகே 4 அதி)

1. நெகேமியாவுக்கும், அலங்கத்தை கட்டுகிறவர்களுக்கும் தடைப்பண்ண பிரச்சனையாக வந்தது யார்? (நெகே 4:1-4)
2. அலங்கத்தை கட்டுவதற்கு எதிரிகள் என்ன தடைகளை கொண்டு வந்தனர்? (நெகே 4:7-8)
3. **உண்மையில் நமக்கு தடைகளை ஏற்படுத்துவதில் பிரதானமாய் இருப்பது "சாத்தானே".**
    a. அவனே தடை செய்கிறவனாக இருக்கிறான் (1 தெச 2:18)
    b. அவன் ஏமாற்ற கூடியவனாக இருக்கிறான் ( 2 கொரி 2:11; வெளி 12:9)
    c. அவனே நமக்கான எதிரியாக இருக்கிறான் (வெளி 12:10; 1 பேது 5:8)
    d. ஆபத்தை கொண்டு வருபவனாக இருக்கிறான். (வெளி 12:12)
    e. நம்மோடு போர் செய்கிறவனும் அவனே (எபே 6:11)
4. மனிதர்களை கொண்டு நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவுக்கும், நம்முடைய இலக்குகளுக்கும் தடைகளை கொண்டு வருகிறவனாக இருக்கிறான். (1 பேது 5:8,9). அவர்களின் அறியாமையையும், ஆவிக்குரிய குருட்டையும் அவன் பயன்படுத்துகிறான்.
    a. யூதர்கள் (1 தேச 2:15,16)
    b. சொந்த ஜனங்கள் (1 தெச 2:14)
    c. சபைக்குள் இருக்கிறவர்கள் (அப் 20:30)
    d. அரசாங்கம் (எபே 6:11; 2 தீமோ 2:9)
    e. கள்ள போதகர்களை/வஞ்ச மனிதர்களை (அப் 13:6-10)
5. தேவன் நம்மோடு இருப்பதால் பிசாசு நமக்கு தடைகளை மட்டுமே நமக்கு கொண்டு வர முடியும். ஆனால் கடைசியில் நாமே அவனை வெற்றிக்கொள்வோம். (ரோம 16:20; வெளி 17:14; வெளி 12:11).
6. **நெகேமியாவும் அவனோடிருந்தவர்களும், எதிரிகளால் வந்த தடைகளை எப்படி மேற்க்கொண்டார்கள் ?** (4:8-23)
    a. **"ஜெபம் பண்ணி" (4:9) –**
        i. ஜெபம் என்பது நமக்கான ஆயுதமாய் இருக்கிறது (எபே 6:18; ரோம 12:12)
        ii. உதாரணம்: அரசாங்கத்தினால் பிரச்சனை வரும் போது ஆதி சபையார் ஜெபம் செய்தனர் (அப் 4:21-32)
        iii. உதாரணம்: பேதுரு சிறையிலிருக்கும் போது சபையார் ஜெபம் செய்தனர், அவன் வல்லமையான முறையில் விடுதலையானான் (அப் 12:5-17)



iv. உதாரணம்: தெசலோனிக்கியரின் உபத்திரவத்தில் பவுல் ஜெபம் செய்தார் (1 தெச 3:10)

v. நெகேமியாவின் வாழ்க்கையில் ஜெபம் முக்கியமானதாக இருந்தது.

b. **"யுத்தம் பண்ணுங்கள்" (4:14,20; யாக் 4:7)**

i. அலங்கத்தை கட்டாதபடிக்கு, மக்கள் சோர்ந்து போன போதும், பிரச்சனை வந்த போதும் நெகேமியா என்ன செய்தான்? (4:10-20)

**1. குடும்பமாக நிறுத்தினான் (வ 13)**

a. புதிய ஏற்பாட்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட சபையானது நமக்கான குடும்பமாக இருக்கிறது. (எபே 2:19-22). சபையே தேவனுடைய வீடு அதில் நாம் அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் ( 1தீமோ 3:15), சபையாய் நாம் இணைந்திருப்பதினால் நாம் வெற்றிக்கொள்ள முடியும். (பிலி 1:27,28)

**2. உங்களுக்காக யுத்தம் பண்ணுங்கள் என்று கூறினான் (4:14; பில 1:27)**

a. நாம் நம்முடைய விசுவாசத்திற்காக யுத்தம் பண்ண வேண்டும்; நல்ல போராட்டத்தை போராட வேண்டும், நாம் போர் வீரர்களாய் இருக்கிறோம். (1 தீமோ 6:12; 2 தீமோ 2:3). நாம் பிசாசுக்கு எதிர்த்து நிற்கும் போது அவன் ஓடி போவான் (யாக் 4:6; 1 பேது 5:9), பிசாசின் வஞ்சகத்தினால் சோர்ந்து போக கூடாது.

**3. ஒரு கையினாலே வேலை செய்து, மறு கையினால் ஆயுதம் பிடித்தார்கள் (4:17-20)**

a. தேவனுடைய வார்த்தை தான் நமக்கான ஆயுதமாய் இருக்கிறது. (எபே 6:17), பிசாசு எதிர்த்து நிற்பதற்கு தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிய வேண்டும் (யாக் 4:7). நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியும் போது பிசாசை நாம் ஜெயிக்கிறோம் (வெளி 12:11)

**4. தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் (4:20)**

a. எக்காள சத்தத்தை கேட்டவுடன் அவர்கள் கூட வேண்டியதாக இருந்தது. (நெகே 4:19,20); சபை கூடிவருதலை விட்டுவிட கூடாது (எபி 10:24,25)

b. விசுவாசம் என்பது தடைகளை மேற்கொள்ள மிகப்பெரிய ஆயுதமாக இருக்கிறது (எபே 6:16)

i. உதாரணம்: மோசேயின் வார்த்தைகளை கவனியுங்கள் (யாத் 14:14)

ii. உதாரணம்: தாவீது ( 1 சாமு 17:47)

c. தேவன் நமக்குள் இருக்கிற விசுவாசத்தினால் வல்லமையாய் கிரியை செய்கிறார் (எபே 3:20=எபே 3:16,17)

i. உதாரணம்: காலேப், யோசுவா (எண் 14:9, 13:30)

ii. உதாரணம்: விசுவாசியாதவர்கள் மீது கோபமாயிருக்கிறார்கள் (எண் 14:11)

**III.தலைவர்கள் நேர்மையுடைவர்களாயிருக்க வேண்டும் (5:1-16)**

1. **நெகேமியா யூதா ஜனங்களிடம் எப்படி நேர்மையாக நடந்து கொண்டான்? (5:11,14,15)**
    a. ஜனங்கள் தேவனுடைய தலைவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் குணங்களில் ஒன்று உண்மைதனம் (அ) நேர்மை (மத் 25:21; நீதி 28:6).
    b. தலைவர் நேர்மையாய் இருக்கிறார் என்பது அவரின் உண்மையையும், உத்தமத்தையும் மற்றும் பொறுப்புடைமையும் நமக்கு காண்பிக்கிறது. (நீதி 4:23-27)
        i. உதாரணம்: பவுல் (அப் 24:16; 1 தெச 2:5; 1 தெச 4:6-9)
        ii. உதாரணம்: தாவீது (சங் 78:70-72)
    c. தேவனுக்கு பயந்து உத்தமமாய் நடக்கிறவர்களை தேவன் விரும்புகிறார் (நீதி 12:22)
    d. நெகேமியா, மற்றவர்களைப் போல உண்மையில்லாதவனாக இருக்காமல், தேவனுக்கு பயந்து உண்மையுள்ளவனாய் இருக்க வேண்டும் என முடிவு செய்தான், செயல்படுத்தினான் (நெகே 5:14-15)
        i. தானியேல் (தானி 1:8)
        ii. யோசேப்பு (ஆதி 39:9)
2. **உண்மையுள்ள, நேர்மையான தலைவர்களை ஜனங்கள் பின்பற்ற விரும்புவார்கள் என்பதோடு அவர்களின் மீது நம்பிக்கை வைத்து நடப்பார்கள் (நெகே 5:12)**
    a. நாம் கடையில் வாங்குகிற குறிப்பிட்ட நிறுவனத்தை சார்ந்த பொருள்கள் நமக்கு தரத்தின் படியில்லை என்றால் நாம் யாராவது அதை வாங்குவோமா? உண்மையில்லாத கட்டையையும், நேர்மையாய் இல்லாத நிறுவனத்தையும் மக்கள் விரும்புவார்களா?
    b. சபையில், சபைக்கு வெளியும் ஊழியரின் வார்த்தை கேட்க வேண்டுமென்றால்; அவர்களுக்கு முன்பாக யோக்கியமானதை ஊழியர் செய்ய வேண்டும் (1 தீமோ 4:12,15,16; 2 தீமோ 2:15; 1 தீமோ 5:22)
        i. உதாரணம் : சாமுவேலின் பிள்ளைகள் ( 1சாமு 8:1-5)
3. **நேர்மையாய் இருக்க தைரியம் வேண்டும் (நெகே 5:6,7)**
    a. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்க வில்லை ( 2 தீமோ 1:7); தேவன் நம்மோடு இருக்கிறார் என்பது நமக்கு தைரியத்தை கொடுக்க வேண்டும்.
    b. நேர்மையில்லாத உலகத்தில் தேவனுடைய பிள்ளைகளாய் வாழவும், தேவனுக்கு பிரியமானதை செய்யவும் நமக்கு தைரியம் வேண்டும். ( 2கொரி 5:7; அப் 28:30,31; 1 யோவா 5:14)
        i. உதாரணம்: சரியான காரியத்திற்கு உறுதியாய் நின்ற எலியா ( 1இராஜா 21)
        ii. உதாரணம்: தேவனுடைய வழி நடத்துதலில் நடத்த மிகாயா (1இராஜா 22:12-27)

## IV. தலைவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும் (நெகே 5:17-19)

1. புறஜாதிகளிடத்திலிருந்து வந்தவர்கள் நெகேமியாவின் பந்தியில் சாப்பிட்டார்கள் (5:17). இது தாழ்மையை காண்பிக்கிறதாக இருக்கிறதா? (நெகே 5:8)
2. **ஒரு தேவனுடைய தலைவர் தாழ்மையாக இருக்க வேண்டும் (மீகா 6:8); நம்முடைய எஜமானும், தலைவராயும், இராஜாதி ராஜாவாகவும் இருக்கிற இயேசு கிறிஸ்து நமக்கு இதை கற்றுக்கொடுத்திருக்கிறார் (யோவா 13:13,14; பிலி 2:5-9)**
    a. இவர் ஊழியம் செய்யும் படி வந்தார் (மத் 20:20)
    b. அவரின் பிறப்பில் நாம் பெரிய தாழ்மையை பார்க்கிறோம். (லூக் 2:7)
    c. அவர் முழுவதும் தேவனுக்கு கீழ்படிந்தார். (எபி 5:8,9)
    d. இயேசு கிறிஸ்து ஒரே சிறந்த தேவனுடைய தலைவருக்கு உதாரணம்.
3. தாழ்மையுள்ள ஒருவரால் தன்னைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் (ரோம 12:3; கலா 6:3), உண்மையில் நான் யார் என தனக்குள் பார்க்க முடியும். தன்னுடைய பலத்தையும், தன்னால் என்ன செய்ய முடியும் என்பதையும் புரிந்துக்கொள்ள முடியும் என்பதோடு தன்னுடைய பலவீனத்தையும், எல்லையையும் புரிந்துக்கொள்ள முடியும். (சங் 131:1,2)
    a. உதாரணம்: ஆபிரகாம், தேவனுக்கு முன்பாக தன்னை குறித்து அறிந்திருத்தான் (ஆதி 18:26,27)
4. நாம் நம்முடைய ஊழியத்திலும், குடும்பத்திலும், சமுதாயத்திலும் தேவனுக்கு கீழ்படிந்து தாழ்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். (யாக் 4:6; 1 பேது 5:5)
5. **தாழ்மையுள்ள தலைவர்:**
    a. தொடர்ந்து கற்றுக்கொள்ள விரும்புவார் (சங் 131:2; 1 பேது 2:3)
        i. அவர் தன்னுடைய பின்பற்றுபவர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்வார்
        ii. “நாம் தலைவர்கள்; நமக்கு பயிற்சியோ, கற்றலோ தேவையில்லை, நமக்கு எல்லாம் தெரியும்” என கூறமாட்டார்.
            i. உதாரணம்: மோசே (அப் 7:22-35)
    b. தான் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்டு; அதை சரி செய்ய நினைக்கிறவராய் இருப்பார், மற்றவர்களுடைய குறைகளை மன்னிக்கிறவராகவும், சீர்பொருந்த பண்ணுகிறவராகவும் நினைப்பார் (கலா 6:1)
    c. மற்றவர்களுடைய திட்டங்களை, எண்ணங்களை விருப்பத்தோடு கேட்பார் (பிலி 2:3; ரோம 12:6)
    d. மற்றவர்களோடு இணைந்து செயல்படுவார் (ரோம 12:18)
    e. மற்றவர்களுடைய இடத்தில் தன்னை வைத்து பார்ப்பார் (நெகே 5:8; மத் 7:12)
    f. தேவைப்படும் போது மற்றவர்களிடம் உதவி கேட்பார்; அகந்தையாக இருக்க மாட்டார் (பிலி 9)
6. **ஒவ்வொரு கிறிஸ்தவரும் கிறிஸ்துவின் சிந்தையை தரித்து கொள்ள வேண்டும் ( 1பேது 4:1)**

## V. தேவனுடைய தலைவர்கள் தெளிவான சிந்தையுடையவராய் இருக்க வேண்டும் (நெகே 6:1-15)

1. நெகேமியாவிற்கு விரோதமாக எதிரிகள் பண்ணின சூழ்ச்சிகள் என்ன? (6:2,6,7,10)
2. நெகேமியா அந்த சூழ்ச்சிகளில் எப்படி தெளிவாக நடந்துகொண்டார்? (6:3,4,8,9,12,13)
3. **தேவனுடைய தலைவராயிருக்கிறவர், தன்னுடைய இலக்கை அடைவதில் தெளிவான சிந்தையுடையவராய் இருக்க வேண்டும்.**
    a. கிறிஸ்தவர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என புதிய ஏற்பாடு நமக்கு போதிக்கிறது. (1 பேது 1:13; 1 பேது 4:7; 1 பேது 5:8)
    b. முன்பாக நடக்க கூடிய தலைவர், கண்களை மூடிக்கொண்டு நடந்தால்; பின்வருபவர்களுக்கு என்னவாகும்? (மத் 15:14; மத் 23:24)
        i. வேத வசனம் (சுவிசேஷம்) தான் நம்முடைய கண்களை தெளிவாக்க கூடியது. (சங் 19:8; 2 கொரி 4:4-6)
        ii. இருளில் நடக்கிறவர்கள், சீர் இல்லாமல், ஒழுங்கில்லாமல் நடப்பார்கள்;] ஆனால் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் சீராய் நடக்க வேண்டும் (ரோம 13: 11-14; 1 யோவா 1:5-7)



4. **தெளிவு என்பது எச்சரிக்கையாயிருப்பதோடு தொடர்புபடுகிறது. (தீத் 2:12)**
    a. தேவனுடைய தலைவர்களாகிய நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். (கொலே 2:8,19; 2 யோவா 8; எபி 4:11)
        i. உதாரணம்: பத்து கன்னிகைகள் (மத் 25:1-13)
        ii. மோசமான உதாரணம்: கலாத்தியர்கள் (கலா 3:1)
    b. பவுலின் வார்த்தைகளை கவனியுங்கள் (1 கொரி 9:26)

## VI. என்னுடைய வேலையானது முடிந்துவிட்டது என தலைவர் அமைதியாய் இருக்க மாட்டார் (நெகே 13:6-19)

1. நெகேமியா அலங்கத்தை கட்டிமுடித்தவுடனே தன்னுடைய வேலை முடிந்துவிட்டது என நினைத்தாரா? (அ) தொடர்ந்து ஒரு தலைவரைப்போல தொடர்ந்து பொறுப்புடையவராய் இருந்தாரா? (13:6-9,11,17)
2. “தலைவர் எப்பொழுதுமே தலைவர் தான்”
3. இயேசு கிறிஸ்து மரித்த பின்பு, உயிர்தெழுந்து இன்றும் சபையை வழிநடத்திக்கொண்டு இருக்கிறார் (எபி 7:25; 1 யோவா 2:1,2)
    a. இயேசு கிறிஸ்து வந்த பின்பு யோவான் ஸ்நானகன் தன் வேலையை நிறுத்திக்கொண்டாரா? (யோவா 1:6-8;மத் 11:12-13; லூக் 7:29,30)

b. உதாரணம்: பவுலும், பர்னபாவும் (அப் 15:36,37)

4. தேறினவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்க வேண்டும் (பிலி 3:12-15)

   a. உதாரணம்: எபிரெயர் 6:10-12

# எஸ்றா


**(போதகர்களுக்கான தலைமைத்துவம்)**

**பிண்ணனி:**

1. எஸ்றா, யூதர்கள் பாபிலோனிய 70 வருட அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட போது அவர்கள் வழி நடத்திய தலைவர்களில் ஒரு தலைவராக எஸ்றா இருந்தார். (எஸ் 7:1,9)
2. நெகேமியாவிற்கு முன்பே எஸ்றா செயல்பட தொடங்கிவிட்டார்.
3. எஸ்றா தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கும் வேதபாரகனாய் இருந்த ஆசாரியனாய் இருந்தான் (எஸ்றா 7:11,12,21; நெகே 8:13)
4. எஸ்றாவின் குறிக்கோள் (அ) நோக்கம் தேவனுடைய வார்த்தையை இஸ்ரவேலருக்கு போதித்து, அவர்களை தேவனிடத்தில் வழி நடத்தவும், தேவனுடைய நியாயப்பிரமானத்தின் படி அவர்களை வாழவும் செய்கிறதாகவும், தேவாலயத்தின் ஆராதனையை கட்டியெழுப்புதலாகவும் இருந்தது. (எஸ்றா 7:14,19,25).
5. நெகேமியாவும் எஸ்றா ஒரே நேரத்தில் வேலை செய்தனர். (நெகே 8:2)

**I. நல்ல தலைவர் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்துகிறவராக இருப்பார் (எஸ்றா 7:6,28; 8:22).**

1. தேவனுடைய கரம் எஸ்றா மீது நன்மையாக இருப்பதினால் அவர் என்ன செய்தார் ? (எஸ் 7:28; எஸ்றா 8:22-23)
2. **எஸ்றா தனக்கான கதவுகள் திறக்கப்பட்டிருந்த போது அதை சரியாக பயன்படுத்தும் நபராக இருந்தார்.**
   a. பவுல் அடிக்கடி கதவுகளை குறித்து பேசியிருக்கிறார். (அப் 14:27; 1 கொரி 16:9; 2 கொரி 2:12; கொலோ 4:4). தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் படி வாய்ப்புகளை பயன்படுத்த பவுல் விரும்பினார்.
      i. கலவரத்திலிருக்கும் போது பவுல் அதையும் வாய்ப்பாக பயன்படுத்தினார். (அப் 22:1-3; அப் 21:38-40)
      ii. அதிகாரிகளுக்கும், இராஜாக்களுக்கும் முன்பாக விசாரிக்கப்படும் போதும் வாய்ப்பை பயன்படுத்தினார். (அப் 24:22-27; அப் 27:24-29)
      iii. சிறையிலிருக்கும் போது வாய்ப்புகளை பயன்படுத்தினார் (அப் 28:30,31)
   b. இயேசு கிறிஸ்து தனக்கான வாய்ப்புகளை சரியாக பயன்படுத்தி தேவனுடைய ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை போதித்தார். (மத் 5:1,2; லூக் 5:1-11)
   c. பேதுருவும், யோவானும் பிறவி சப்பாணி குணமான போது, அதை தேவனுடைய வார்த்தையை போதிக்கும் வாய்ப்பாக பயன்படுத்தினார்கள். (அப் 3:11,12)



3. **மோசமான தலைவர் அநேக வாய்ப்புகளை தவற விடுவார்.**
    a. காலத்தை அறியாதவராய் ஒருவர் செயல்படும் போது அநேக வாய்ப்புகளை தவற விடுவரா?
    b. ஞானவான்கள் காலத்தை பிரயோஜனப்படுத்துவார்கள் (எபே 5:16; கொலோ 4:5)
        i. உதாரணம்: நான்கு குஷ்டரோகிகள் ( 2இராஜா 7:8-9)
        ii. உதாரணம்: தானியேல் (தானி 9:1-3)
        iii. உதாரணம்: நோவா (எபி 11:7)
        iv. மோசமான உதாரணம்: பொல்லாத ஊழியக்காரன் (மத் 24:47-51)
        v. மோசமான உதாரணம்: கேயாசி (2 இராஜா 5:23-26)
    c. தன் கையில் வாய்ப்புகள்; இருக்கிறது என தெரிந்து அதை விட்டுவிடுகிறவன் சோம்பேறியான தலைவனாக இருப்பான் (நீதி 20:4; நீதி 26:15)
    d. **நல்ல தலைவன் காலத்திற்கு முந்தி செயல்படுவான் (நீதி 6:6-8)**
        i. "வந்தால் பார்த்துக்கொள்வோம்; என அலட்சியமாய் இருக்கமாட்டான்"
        ii. உதாரணம்: சிலர் அபராதம் விதிக்கப்படும் வரை தங்களுடைய வரிகளை செலுத்தமாட்டார்கள்.
        iii. மோசமான உதாரணம்: எலி தன்னுடைய பிள்ளைகளை தடுக்க வில்லை. (1 சாமு 3:13; 1 சாமு 2:24)
        iv. நல்ல தலைவன் பிரச்சனைகள் ஏற்படுவதற்கு முன் அவைகளை முன்னறிந்து, எதிர்கொள்கிறவனாக இருக்க வேண்டும்.
            1. உதாரணம்: நாத்தான் (1 இராஜா 1:5-39)
            2. உதாரணம்: சாலோமோன் (1 சாமு 3:8,9)
        v. தன்னுடைய அப்போஸ்தலர்கள் படப்போகிற பாடுகளை இயேசு முன்னதாகவே அறிவித்தார் (மத் 10:17-23)
            1. உதாரணம்: பவுல் (1 தெச 3:4)
            2. உதாரணம்: பவுல் கள்ள போதகர்களை குறித்து முன்பே எபேசு சபையாருக்கு எச்சரித்தார். ( 2தீமோ 4:3; அப் 20:29)
    e. வாய்ப்புகளை பயன்படுத்த தன்னால் என்ன முடியும் என்பதை தலைவன் யோசிப்பார். (எஸ்றா 8:21)
        i. திறமை (எஸ்றா 7:21)
        ii. ஜெபம் (எஸ்றா 7:23)
        iii. உபவாசம் (எஸ்றா 7:23)
        iv. பொருள்கள் (எஸ்றா 7:21)

## II. இலக்குகளை உடைய தலைவர் அதற்கு தன்னைதானே ஆயத்தம் செய்வார் (எஸ்றா 7:10)

1. எஸ்றாவின் இலக்கு என்னவாக இருந்தது? (எஸ்றா 7:14,19,25)
2. தேவனுடைய வார்த்தையை போதிப்பதும்; ஜனங்களை அதற்கேற்ற படி நடத்துவதும் அவருடைய இலக்காகவும், நோக்கமாகவும் இருந்தது.



3. **இந்த இலக்குக்கு எஸ்றா எப்படி தன்னை தானே ஆயத்தம் செய்தான்? (எஸ்றா 7:6,10,11)**
   a. **வேதத்தை ஆராய:**
      i. எஸ்றா வேதத்தை ஆராய தன்னுடைய இருதயத்தை ஆயத்தம் செய்திருந்தார்.
      ii. தலைவர்கள் தங்களுடைய இலக்கிற்கு தேவையான காரியங்களை கற்றுக்கொள்வார்கள்.
      iii. "மிக முக்கியமான காரியம், வழி நடத்த விரும்புவதை விட வழி நடத்துவதற்குத் தயாராகும் உங்கள் விடாமுயற்சி"
      iv. எஸ்றா ஆசாரியனாயிருந்தான், அவன் தன்னுடைய பொறுப்பு என்ன என்பதை உணர்ந்து, அதற்கு தன்னை ஆயத்தப்படுத்தினான். (மல் 2:7)
      v. ஒரு போதகன் தொடர்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்( 1தீமோ 4:15; ஏசா 50:4)
         1. கற்றுக்கொள்ளாதது தான் கள்ள உபதேசத்திற்கான காரணம் ( 2பேது 3:16; அப் 13:27), ஒரு போதகன் தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளாமல் இருப்பது மிகவும் மோசமானது.
            a. உதாரணம்: நிக்கொதேமு (யோவா 3:10)
            b. உதாரணம்: பரிசேயர்கள் (மத் 9:11-13)
         2. இயேசு பிதாவின் சித்தத்தின் படி செய்ய பிதாவின் சித்தத்தை அறிந்திருந்தார். (யோவா 7:14-16; யோவா 12:49), இயேசு கீழ்படிதலை கற்றுக்கொண்டார் (எபி 5:8).
         3. பவுல் கமாலியேலின் (அப் 5:34) பாதத்தருகே வளர்ந்து, நியாயப்பிரமாணத்தில் தேறினவராய் இருந்தார் என்றாலும் (அப் 22:3); இயேசுவை அறிகிற அறிவில் வளர வேண்டும் என நினைத்தார். (பிலி 3:7), கிறிஸ்துவிடம் இருந்து கற்றுக்கொண்டார் (கலா 1:12)
         4. பெண்கள் தன்னுடைய பிள்ளைகளுக்கு போதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் (உபா 6:7; யாத் 12:25-27; 1 தீமோ 5:10; 2 தீமோ 1:5)
         5. எஸ்றா இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையில் படித்துத் தேறின வேதபாரகனாய் இருந்தான். (எஸ்றா 7:11)
   b. **அதின் படி செய்யவும் பக்குவப்படுத்திருந்தான் (எஸ்றா 7:10)**
      i. எஸ்றா வெறும் வேதத்தை ஆராய்வதுடன் நிறுத்தி கொள்ள வில்லை, கற்றுக்கொண்ட வார்த்தைகளின் படி செய்ய தன்னை தயார் செய்தான்.
         1. உதாரணம்: இயேசு கிறிஸ்து (அப் 1:2)
      ii. ஒரு போதகன் தான் போதித்த வசனத்தை அவர் கைகொள்ளாத பட்சத்தில்; அவரின் வார்த்தைகளை ஜனங்கள் கேட்பார்களா? ( ரோம 2: 18-25)
         1. உதாரணம்: பவுல் தன்னை ஒடுக்கி கீழ்படித்தினார் ( 1 கொரி 9:26)
      iii. போதகன் ஜனங்களுக்கு மாதிரியாக இருக்க வேண்டும் ( 1தீமோ 4:16)
         1. தீமோத்தேயு நல்ல ஊழியக்காரனாயிருக்க போதகத்தை அநுசரிக்க வேண்டியதாக இருந்தது. ( 1தீமோ 4:6)
         2. தீத்து கீரேத்தா தீவாற்கு தன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாக காண்பிக்க வேண்டும் என பவுல் கூறினார். (தீத் 2:7)
            a. மோசமான உதாரணம்: பரிசேயர்கள் (மத் 23:3)
            b. பரிசேயர்கள் தாங்கள் சொல்லியும்; அதன்படி செய்யாததினால் அவர்களை இயேசு மாயக்காரர்கள் என கூறினார். (மத் 23:13)
            c. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையாக இருந்தார்கள் (மத் 23:27)
               **i.** உதாரணம்: அனனியா (அப் 23:3)

c. **உபதேசிக்கவும் பக்குவப்படுத்தியிருந்தான்**

i. எஸ்றா தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கும் போதிக்க தயாரானான், தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய கட்டளைகளை தெரியப்படுத்தினான் (நெகே 8:4)

ii. தேவனுடைய ஜனங்களுக்கு, தேவனுடைய வார்த்தையை போதிப்பது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. (2தீமோ 2:15)

iii. ஆரோக்கியமான வசனங்களை நாம் உபதேசிக்க வேண்டும். (தீத் 2:1)

1. ஒரு போதகர் போதிக்கிற ஆரோக்கியமான வசனத்தினால் தான் ஆரோக்கியமான விசுவாசம் வரும் (தீத் 1:14); நாம் தேவனுடைய வார்த்தைகளையே போதிக்க வேண்டும், (1 பேது 4:11)
2. தேவனுடைய வார்த்தைகளை போதிப்பதினால் ஜனங்ளுடைய கண்கள் திறக்கப்படும். (அப் 26:18; நெகே 8:7,8)
   a. உதாரணம்: பேதுருவின் பிரசங்கம் (அப் 2:36-38)
   b. உதாரணம்: பவுல் (அப் 13:2)
   c. உதாரணம்: யோசுவா (யோசு 24:14-18)
   d. உதாரணம்: கொர்நேலியோ வீட்டில் பேதுரு (அப் 10:33)
3. தேவனுடைய வார்த்தைகளை போதிப்பதற்கு, போதகர்கள் இல்லையென்றால், ஜனங்கள் தேவனை அறியாதவர்களாயும், தேவனுடைய திட்டங்களை அறியாதவர்களாய் இருந்து தங்களுடைய பாரம்பரியங்களினால் அழிந்து போவார்கள், ஜனங்களுக்கு தேவனுடைய வார்த்தையை போதிப்பது என்பது மிகவும் முக்கியமானது.

## III. நல்ல தலைவர் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் மீது கவனம் செலுத்துவார் (எஸ்றா 7:12)

1. ராஜா அர்தசஷ்டா எஸ்றாவை எப்படி அழைத்தார்? (எஸ்றா 7:12) எஸ்றா உத்தம வேதபாரகனாயிருந்தார்.
2. தேவனுடைய தலைவர்களாய் இருக்கிற நாம் முதலில் நம்முடைய வாழ்க்கையின் மீது கவனம் செலுத்த வேண்டும். (1 தீமோ 5:22)

a. **தலைவர் சுய ஒழுக்கமுடையவராய் இருப்பது, அவருடைய இலக்கை அடைய மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. (பிர 10:1)**

i. நேரத்தை சரியாக கையாளுதல் ((பிர 11:6)

ii. இலக்கின் மீது கவனம் செலுத்துதல் – முழு முயற்சி செய்தல் (நீதி 29:20)

iii. நேர்மறையான மனப்பான்மை

iv. விடா முயற்சி உடையவராய் இருந்தல் (பிர 11:1)

v. பொறுப்புடையவராய் இருப்பது (நீதி 29:12)

vi. நிலைத்தன்மை (உறுதிப்பாடு) – (யாக் 1:8; நீதி 28:19)

vii. உணர்ச்சிகளை கட்டுப்படுத்தல் – கோபம் (பிர 7:9; நீதி 16:32)

b. **ஒரு போதகனாக தீமோத்தேயு தன்னுடைய வாழ்க்கையின் மீது கவனம் செலுத்த வேண்டும் என பவுல் கூறுகிறார். (1 தீமோ 4:12)**

i. இளமை

ii. வார்த்தை

iii. நடக்கை
iv. அன்பில்
v. ஆவி
vi. விசுவாசத்தில்
vii. கற்பில்

c. **தேவனுடைய தலைவர் சுய ஒழுக்கமுடையவராய் இருப்பதற்கு தடையாக இருக்கும் காரியங்களாக**
   i. சோம்பேறிதனம்
   ii. தோல்வியினால் சோர்வடைதல்
   iii. மீண்டும் தோல்வி அடைந்து விடுவோம் என பயம்
   iv. அறியாமை
   v. மோசமான பழக்கம்

3. **ஒரு போதகன் என்ற வகையில் நாம் தேவனுக்கு முன்பாக நிற்கிறோம் என்பதினால்; நாம் உத்தமமாய் இருக்க வேண்டும். ( 1தீமோ 4:12; ஏசா 52:11)**
   a. பவுல் தேவனுக்கு முன்பாக உத்தமானாய் நிற்க பிரயாசப்பட்டார் (அப் 23:1)
   b. நாம் இந்த பூமியில் வாழ்ந்தாலும், நாம் தேவனுக்கு முன்பாக இருப்பதால், இவருக்கு முன்பாக உத்தமமாய் நடப்பது அவசியம். ( 2 தீமோ 2:15)
      i. உதாரணம்: நோவா (ஆதி 6:9)
      ii. உதாரணம்: யோபு (யோபு 1:1)
      iii. மோசமான உதாரணம்: சர்தை சபை (வெளி 3:1-2)
4. கிறஸ்தவர்களாய் இந்த சமுதாயத்தில் வாழ்கிற நாம் இந்த சமுதாயத்தில் ஒழுங்காய் நடத்துக்கொள்ள வேண்டும். (பிலி 2:15)
   a. நாம் வெளிச்சத்தின் பிள்ளைப்போல நடந்துக்கொள்ள வேண்டும் (1 தெச 5:5-8)
   b. நம்முடைய வாழ்க்கையால் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும் (1 பேது 2:12; மத் 5:16)
   c. நாம் இந்த உலகத்தோடே ஒத்து வாழ கூடாது? (ரோம 12:1,2; 2 கொரி 6:17)
   d. நாம் நம்முடைய சமுதாய கடமைகளை நிறை  வேற்ற வேண்டும். (ரோ 13:1-7)

## IV. ஒரு தலைவராக தன்னை பின்பற்றுபவர்களை நாம் உற்சாகப்படுத்த வேண்டும் (நெகே 8:9,10)

1. ஜனங்கள் அழுத போது தேவனுடைய ஜனங்களை வழி நடத்தியவர்கள் அவர்களுக்கு என்ன செய்தனர்? (நெகே 8:9-10)
2. **தேவனுடைய தலைவர்களாய்; தேவனுடைய ஜனங்களை போதித்து நடத்துகிறவர்கள் அவர்கள் சோர்ந்து போகும் போது அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை நடத்த வேண்டும் (எபி 12:12,13)**
   a. தேவன் யோசுவாவைப் பலப்படுத்தினார் (யோசு 1:7,8)
   b. யோசுவா ஜனங்களை பலப்படுத்தினான் (யோசு 1:10-18)
   c. உதாரணம்: கப்பற்சேதத்தில் பவுல் (அப் 27:21)
3. **உற்சாகப்படுத்துவத்தின் முக்கியத்துவம்:**
   a. உற்சாகப்படுத்துவதால் பின்பற்றுபவர்களை சோர்ந்து போன நேரத்தில் அவர்களை சரியான பாதையில் நடந்த முடியும்.

        i. உதாரணம்: யோசுவா (யோசுவா 24:16,21)

b. உற்சாகப்படுத்துவதின் மூலம் ஜனங்களின் பிரச்சனைகளையும், தடைகளையும் கடந்து வர செய்ய முடியும்.
    i. உதாரணம்: எஸ்றா (எஸ்றா 5:1,2)
    ii. உதாரணம்: நெகேமியா (நெகே 4:14)
    iii. உதாரணம்: மொர்தகாய் (எஸ்தர் 4:13,14)

c. "உற்சாகப்படுத்துவது என்பது வாகனத்தில் வாகனத்தை இயக்கப் பயன்படுத்தப்படும்; எரிபொருளைப் போன்றது, எரி பொருள் குறைய, குறைய நாம் அதை நிரப்ப வேண்டும்".

d. பாரட்டுதல் என்பது உற்சாகப்படுத்துதலின் முக்கியத்துவம் வாய்ந்தது. (நீதி 25:11)

e. பாராட்டும் போது தேவைப்படுகிற இடத்தில் சீர்பொருந்தப் பண்ணவும் வாய்ப்பு கிடைக்கிறது. (நீதி 16:24; பிர 9:17)

# எசேக்கியா

**பிண்ணனி:**

1. எசேக்கியா ராஜாவாக இருந்தான் (2 இராஜா 18:1-2); அவன் ராஜாவான போது அவனுடைய வயது 25-ஆக இருந்தது. இவன் இருபத்தொன்பது (29) ஆண்டு அரசண்டான்.
2. இவனுடைய தகப்பனாகிய ஆகாஸ் தேவனுடைய பார்வையில் பொல்லாதவனாய் இருந்து, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்தான் (2 இராஜா 16:1-4; 2 நாள 28:19,22); ஆனால் எசேக்கியா தேவனுக்கு உண்மையாக இருந்தான்; தேவனுடைய பார்வையில் செவ்வையானதை செய்தான். ( இராஜா 18:3)
3. எசேக்கியா ராஜாவானது போது தேசத்தில் மோசமான நிலையிலிருந்தது, இராஜ்யம் பிளவுப்பட்டிருந்தது (1 இராஜா 18:1); இஸ்ரவேல் தேவனை விட்டு விலகி போயிற்று (2 இராஜா 17:18); யூதா கோத்திரம் மாத்திரமே மீதியாயிற்று, யூதா தன் மனம் போன போக்கில் போனது (17:19); பாரம்பரியம், விக்கிரகாரதனை தலைத் தூக்கியிருந்தது (18:4)
4. அசீரியா ராஜா இஸ்ரவேல் ஜனங்களை நாடு கடத்தி; சமாரியாவில் அந்நிய ஜனங்களை குடியேற்றினான் ( 2 இராஜா 17:24-41). அங்கே இருந்த அந்நிய ஜனங்கள் தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்தார்கள் ( 2இராஜா 17:41), பார்க்கவும் ( 2இராஜா 18:10-12)

## I. உறுதியாய் நிற்கிற தலைவனால் பல வெற்றிகளை அடைய முடியும் ( 2 நாளா 29:10; 2 நாளா 31:20,21)

1. **எசேக்கியா தன் தகப்பனைப்போல இல்லை**
    a. எசேக்கியாவின் தகப்பன் ஆகாஸ் கோழையாக இருந்தான் ( 2 இராஜா 16:7-11)
        i. ஆகாஸ் கோழையாக அசீரியா ராஜாவின் உதவியை கேட்டு, தேவனுக்கு பிரியமில்லாத காரியத்தை செய்தான் (2 நாள 28:19-21)
        ii. அவன் தேவனுக்கு துரோகம் பண்ணி, கர்த்தருடைய ஆலயத்தின் கதவுகளை பூட்டுப்போட்டு, அந்நிய தேவர்களுக்கு பலிபீடங்களை கட்டினான். (2 இராஜா 28:24)
        iii. தேவன் அவனுக்கு உதவி செய்ய நினைத்தும், அவன் அதை புறக்கணித்தான் (ஏசா 7:11,12); அவன் அசீரியா ராஜாவோடு கைகோர்ந்து, தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்தான்.
        iv. ஆகாசை போல தேவனுடைய தலைவர்கள் கோழையாக இருக்க கூடாது (எபி 10:38,39)
            1. உதாரணம்: பவுல் கோழையாக இல்லை! (அப் 20:22-24); கள்ள போதகர்களுக்கு வளைந்து கொடுக்க வில்லை (கலா 2:5)
                a. பவுல் தைரியமுடையவராயிருந்தார் (1 தெச 2:2); துணிவுடன் கள்ள உபதேசத்திற்கும், பாரம்பரியத்திற்கும் எதிராக நின்றான். (அப் 13:6-12)
            2. கோழையான தலைவர்கள் சாக்குப்போக்கு, சொல்லி தன் தலையை மணலில் புதைத்து விடுகிறார்கள் (நெருப்பு கோழியைப்போல)
            3. தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடுக்கவில்லை (2தீமோ 1:7). மனிதனுக்கு பயந்து தேவனை விடுகிறவர்களுக்கு தண்டனை இருக்கிறது. (வெளி 21:7)

b. **எசேக்கியா தன்தகப்பனைப்போல கோழையாகயில்லாமல், அசீரியா ராஜாவோடு உடன்படிக்கைப்பண்ணாமல்; தேவனோடு உடன்படிக்கை பண்ணி; அசீரியா ராஜாவை தள்ளிவிட்டான் ( 2நாள 28:10; 1 இராஜா 18:6)**
    i. எசேக்கியா கர்த்தரை விட்டு பின்வாங்காமல், கர்த்தரை சார்ந்திருந்தான் ( 2இராஜா 18:6)
    ii. எசேக்கியா யூதாவின் மீது ராஜாவாக இருந்த போதுதான், இஸ்ரவேல் தேசம் (வடக்கு இராஜ்யம்) அசிரிய ராஜாவினால் சிறைப்பிடித்துக் கொண்டு போகப்பட்டது(2 இராஜா 18:11). இந்த நேரத்திலும் எசேக்கியா கர்த்தரையே சார்ந்திருந்தான்.
    iii. அசிரியா ராஜா எசேக்கியாவை அச்சுறுத்தும் கடிதத்தை கொடுத்தான் (ஏசா 36:1-22); எசேக்கியா அதை கர்த்தருக்கு முன்பாக பிரிந்து வாசித்தான். ( 2 இராஜா 19:14); எசேக்கியா கர்த்தரை விட்டு விடாமல் கர்த்தரை சார்ந்திருந்து ஜெபம் செய்தான், தேவன் வெற்றியை கொடுத்தார் ( 2இராஜா 19:14-20; ஏசா 37:37,38).
    iv. நாம் தேவனை சார்ந்திருப்பதன் மூலமாய் பலம் அடைய முடியும். (எபி 13:6; சங் 118:6,7)
        1. நமது பலம் நம்மிடத்திலிருந்தல்ல, மாறாக தேவனிடத்திலிருந்து வருகிறது (சங் 18:1,29-36)
            a. உதாரணம்: தாவீது (சங் 56:3,4)
            b. உதாரணம்: ஆபிரகாம், சாராளும் (எபி 11:11; ரோம 4:19)
            c. உதாரணம்: பவுல் (பில4:13)
    v. ஜெபத்தில் உறுதியாய் இருப்பது நமக்கு வெற்றியை கொடுக்கிறது (ரோம 12:12; லூக் 18:1-9)


c. **தேவனை சார்ந்திருக்கும் தேவனுடைய தலைவர்கள், தேவன் தன்னுடைய பாதுகாவலரர் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். ( 2 தீமோ 4:17; சங் 91:4)**
    i. உதாரணம்:எலியா (2 இராஜா 1:8-14)
    ii. உதாரணம்:எலிசா (2 இராஜா 6:8-17)
    iii. நம்மோடு இருக்கிறவர் பெரியவர் (1 யோவான் 4:4)

d. விசுவாசத்தில் உறுதியாய் நிற்பதன் மூலம் வெற்றி கொள்ள முடியும் (1 யோவா 5:4)

2. **உறுதியாய் நிற்கிற தலைவருக்கு நம்பிக்கை மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. (2 இராஜா 18:5)**
    a. அசிரியா ராஜா எசேக்கியாவின் நம்பிக்கை குறித்து கேலி செய்த போதும் (ஏசா 36:14,18,20); தன்னுடைய நம்பிக்கையில் உறுதியாய் இருந்தான். (2 நாள 32:7-8)
    b. தனக்கு பிரச்சனை வந்த போது எசேக்கியா தேவனை நோக்கி செல்ல கூடியவனாக இருந்தான் ( 2இராஜா 20:1-8); அதினால் வெற்றி பெற்றான்.
    c. **கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் நம்பிக்கையின் பூரண நிச்சயமுடையவர்களாய் இருக்க வேண்டும் (எபி 6:12; எபி 10:22)**
        i. நம்முடைய நம்பிக்கை திட அஸ்திபாரமாக இருக்க வேண்டும் (கொலோ 2:5-7)
        ii. நம்முடைய நம்பிக்கையை தான் நம்முடைய ஆத்தும நங்கூரம் (எபி 6:19)
        iii. உதாரணம்: கன்மலையின் மீது வீடு கட்டினவன் (மத் 7:24-27)
        iv. நம்பிக்கையில்லாத மனிதன் இறந்த சரீரத்திற்கு சமம்.
        v. தேவன் மீது உள்ள நம்முடைய நம்பிக்கையின் மூலம் நாம் ஜெயம் கொள்ள முடியும்.(எரே 17:7,8)

**II. உறுதியாய் நிற்கிற தலைவரால்; அநேகரை நல்ல வழியில் நடத்த முடியும். ( 2 நாளா 30:1-27)**

1. **எசேக்கியா உறுதியாய் இருந்தபடியால்; அவனால் இஸ்ரவேல் ஜனங்களை தேவனிடத்தில் வழி நடத்த/மாற்ற முடிந்தது. (2 நாளா 31:21)**
    a. இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை தேடும் படி மாற்றினான். (2 நாளா 30:6-12)
        i. அவன் விக்கிரகதோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டான்.(2 இராஜா18:4)
        ii. தேவனுடைய தலைவர்களாய் நம்மால் ஜனங்களுக்குள் மாற்றங்களை கொண்டுவர முடியும் ( 1தெச 2:13)
            1. தேவனை தேடும் படியாக நாம் ஜனங்களை உத்வேகப்படுத்தலாம்
                a. உதாரணம்: யோசுவா உறுதியாக நின்றான், மாற்றம் வந்தது (யோசு 24:15,16)
            2. தேவனுக்கு பயப்படும் படிக்கு நாம் அவர்களிடம் மாற்றத்தை கொண்டு வர முடியும்.
            3. நாம் ஒருவரின் வாழ்க்கையில் அவரை மிகப்பெரிய ஆபத்திலிருந்து வெளியே கொண்டுவர அவரது கண்களை திறக்க முடியும். (யூதா 22)
            4. சபையை சரியாக பாதையில் வழி நடந்த மாற்றத்தை கொண்டுவர முடியும் (அப் 9:31); நாம் இந்த உலகத்தை கலக்க முடியம் (அப் 17:6; அப் 24:5)



    b. **எசேக்கியா உறுதியாய் இருந்து ஒழுங்கை ஏற்படுத்தினான் (2 நாளா 31:2)**
        i. ஊழியஞ் செய்து துதித்து, ஸ்தோத்திரிக்கவும், ஒழுங்குப்படுத்தினான் ( 2நாளா 31:2)
            1. தேவனுடைய பிள்ளைகளாய் நாம் தேவனை இணைத்து மகிமைப்படுத்த வேண்டும் (ரோம 15:5;9-11)
            2. நாம் நன்றியுடையவர்களாய் இருந்து, நாம் ஸ்தோரிக்க வேண்டும்
                a. உதாரணம்: அன்னாள் (2 சாமு 2:1-10)
                b. உதாரணம்: மரியாள் (லூக் 1:46-55)
                c. உதாரணம்: இயேசுவின் பிறப்பில் பரம சேனை துதித்தல் (லூக் 2:13,14)
2. நாம் நம்முடைய உறுதியை விட்டு விலகிப்போய்விட கூடாது (யூதா 23; 2 பேது 3:17,18)
    a. உதாரணம்: பிலிப்பியர் 1:27

# பாடம் – 2

## தலைமைத்துவம் மற்றும் பணம்

### தலைமைத்துவத்திற்கும் பணத்திற்கும் என்ன தொடர்பு?

தலைமைத்துவத்தில் பணத்தை எப்படி கையாளுகிறோம் என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. இலக்குகளை அடைவதில் பணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதோடு, அந்த பணத்தை எப்படி சேகரிக்கிறோம், பயன்படுத்துகிறோம் என்பது தலைமைத்துவத்திற்கும் பணத்திற்கும் தொடர்பை ஏற்படுத்துகிறது.

தேவனுடைய தலைவர்களாய், நம்முடைய தனிபட்ட வாழ்க்கையிலும், ஊழியத்திலும், சபையை நடத்துவதிலும் பணம் தேவைப்படுவதால்; அந்த பணத்தை எப்படி சம்பாதிப்பது, அதை தேவனுடைய தலைவர்களாய் எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதையும், பணத்தை கொண்டு ஊழியத்திலும், குடும்பத்திலும் இலக்குகளை அடைவது எப்படி என்பதை குறித்து வேதாக தலைவர்களிடமிருந்தும், வேதாகமத்திலிருந்தும் கற்றுக்கொள்ளுவது தான் இந்த பாடத்தின் நோக்கம்.

**I. பணம் நல்லாதா? கெட்டதா? (1 தீமோ 6:10; பிர10:19)**

1. கிறிஸ்தவர்கள் பணம் சேர்ப்பதை குறித்தும், அதிக பணம் வைத்திருப்பதை குறித்தும், குழப்பமுடையவர்களாயிருக்கலாம். பணம் சேர்ப்பதும், பணத்தை வைத்திருப்பதும் பாவம் என ஒருவர் நினைக்கிறவராக இருந்தால், அவர் தவறான எண்ணம் உடையவராக இருக்கிறார். ஆனால் பணம் எப்பொழுது தீமையாகிறது என்பதை குறித்து நாம் அறிந்துக்கொள்ள வேண்டும்.
    a. **பண ஆசை தவறு (1 தீமோ 6:10; பிர 5:10)**
        i. உதாணம்: யூதாஸ் (யோவா 12:4-5)
    b. பணத்தை நம்புவது தவறு (1 தீமோ 6:17; சங் 49:6,7)
        i. உதாரணம்: சீமோன் (அப் 8:18)
    c. பணத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது தவறு (லூக் 12:15-21)
        i. உதாரணம்: ஐஸ்வரிய வாலிபன் (மத் 19:21-24)
    d. ஆடம்பரமான வாழ்க்கைக்காக பணத்தை அதிகமாக சம்பதிக்க தேடுவதும், செலவிடுவதும் தவறு (நீதி 1:13,19)
        i. உதாரணம்: அநியாயமான ஐசுவரியவான்கள் (யாக் 5:1-6)
2. பணத்தை குறித்து நாம் சரி யான மனப்பான்மையுடையவர்களாய் இருக்க வேண்டும், பணம் நல்லதா கெட்டாத என்பது நாம் அதை எப்படி பயன்படுத்துகிறோம் (அ) பார்க்கிறோம் என்பதிலிருக்கிறது.
    a. **பணம் இந்த பூமிக்குரிய வாழ்க்கைக்கு மட்டுமே (பிர5:15)**
        i. உதாரணம்: சாலோமோன் (பிர 2:17-20)
        ii. பணத்தை கொண்டு நாம் இரட்சிக்கப்பட முடியாது (சங் 49:8); பணம் பரலோகம் கொண்டு செல்லாது.
    b. **பணம் நமக்கு தேவையான ஒன்று (மத் 6:31,32)**
        i. தேவனே நமக்கு நன்மையானவைகளை கொடுக்கிறார் (பிர2:24-26)
        ii. நமக்கு உணவும், பாதுகாப்பும், உடையும் தேவை என்பது தேவனுக்கு தெரியும்.

iii. முதலாவது தேவனை தேடும் போது இவைகள் எல்லாம் நமக்கு கொடுக்கப்படும் என இயேசு கூறியிருக்கிறார்.

iv. தேவனை தள்ளிவிட்டு பணத்தை அதிகம் சேர்க்க நினைப்பது தவறு (பிர5:10,11; லூக் 12:21), பணத்திற்கு மேலாக தேவன் நமக்கு தேவை. நமது வாழ்க்கை பணத்தை மட்டுமே சார்ந்திருப்பது இல்லை. (லூக் 12:13-15)

v. **பணத்தை விட மிகவும் முக்கியமான காரியங்கள் இருக்கின்றன, பணம் வெறும் காகிதம் மட்டுமே.**

1. விசுவாசம் ( 1பேது 1:7)
2. ஞானம், அறிவு, புத்தி (நீதி 3:13-21; நீதி 2:3-7)
   a. ஞானம் மிகவும் முக்கியம் (யோபு 28:12-20)
   b. இயேசு பற்றிய அறிவு எல்லாவற்றிறக்கும் மேலானது (பிலி 3:7)
3. குணசாலியான மனைவி (நீதி 31:10)
4. சமாதானம் (நீதி 17:1; ரோம 5:1,2)
5. கர்த்தருக்கு பயப்படுதல் (நீதி 19:23)
6. நேர்மை (நீதி 28:6)
7. பிரயோஜனமான வாரத்தைகள் (நீதி 25:22; மாற் 16:15,16)
8. நியாயத்தீர்ப்பு (நீதி 11:4)

vi. நல்ல திட்டங்களையும், செயல்களையும் செய்ய பணம் கருவியாக இருக்கிறது (பிர10:9)

1. உதாரணம்: தாலந்து உவமை (மத் 25:14-30)
2. தேவனுடைய ஊழியத்தில் பணம் தேவைப்படுகிறது (1 கொரி 16:1,2)

**II. நாம் உக்கிராணக்காரனாய் இருப்பதால்; பணத்தை குறித்து பொறுப்புடையவர்களாய் இருக்க வேண்டும். ( 1கொரி 4:2; மத் 25:14-30; 1 பேது 4:10)**

1. எல்லாம் தேவனுடையது (1 கொரி 10:26; உபா 10:14)
   a. அவரே செழிப்பான கால நேரங்களை கொடுக்கிறார் (அப் 14:16,17)
   b. நாம் பணத்தை சம்பாதிக்கிறதற்கான பலத்தை தேவனே நமக்கு கொடுக்கிறார் (உபா 8:18); தேவன் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ( 2கொரி 3:5)
   c. நாம் தேவனுடைய கரத்திலிருந்து வாங்குகிறவர்களாக இருக்கிறோம் (1 நாளா 29:14)
2. தேவன் நமது கரங்களில் கொடுத்தவைகளை குறித்து நாம் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும் (1 கொரி 6:19,20; 1 கொரி 10:31)
   a. தற்காலிக மேனேஜர்களைப் போல நாம் தேவனுக்கு இருக்கிறோம். (லூக் 12:42-48)
   b. நாம் உக்கிரக்காரர்களாய் இருப்பதால்; தேவன் நமக்கு கொடுத்திருக்கிறவைகளை குறித்து கணக்கு கொடுக்கிறவர்களாக அதை சரியாக பயன்படுத்த வேண்டும் (நீதி 22:20)
   c. நாம் சோம்பேறிகளாய் இருக்க கூடாது.
      i. உதாரணம்: தெசலோனிக்கியர்களின் மோசமான நிலை (2 தெச 3:11,12)
      ii. உதாரணம்: ஒரு தாலந்து வாங்கினவன் (மத் 25:24-26)
   d. நாம் அதை சரியான முறையில் பிரயோஜனப்படுத்த வேண்டும் (பிர 5:19,20)
      i. உதாரணம: பிலேமோன் 1:6

ii. உதாரணம்: எஸ்தர் (எஸ்தர் 4:13,14)
iii. உதாரணம்: அநீதியுள்ள உக்கிரணக்காரன் (லூக் 16:9)

e. நாம் கணக்கு காண்பிக்கிறவர்களாக இருக்கிறோம் (லூக் 16:2)
    i. அனனியா, சப்பிராள் (அப் 5:1-5)
    ii. நாம் யாரைப்போல இருக்கிறோம்? (மத் 25:14-36)
        1. 5 தாலந்து வாங்கினவனைப்போலவா?
        2. 2 தாலந்து வாங்கினவனைப்போலவா?
        3. 1 தாலந்து வாங்கினவனைப்போலவா?

**III. பணத்தை சரியான முறையில் சம்பாதித்தல்:**

1. **நாம் வேலை செய்ய வேண்டும் என தேவன் விரும்புகிறார் (ஆதி 2:5-7)**
    a. தேவன் ஆதாமுக்கு வேலையை கொடுத்தார்; அவனுடைய வேலை தோட்டத்தை, பண்படுத்தவும் அதை காக்கவும் வேண்டியதாயிருந்தது (ஆதி 2:15), ஆதாமை தேவன் ஏதேன் தோட்டத்தை விட்டு துரத்திவிடும் போதும் அவனுக்கான வேலை இருந்தது (ஆதி 3:23)
    b. நாம் சோம்பேறிகளாய் இருக்க கூடாது (நீதி 24:30-34)
        **i.** இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து கானான் தேசத்திற்கு போகும் போது, தேவன் அவர்களுக்கு வனாந்திரத்தில் உணவுகளை கொடுத்து போஷித்தார்; என்றாலும் கானன் தேசத்திற்கு சென்ற பின்பு தேசத்தின் தானியத்திலே புசித்த பின்பு மன்னா பெய்யாமல் ஒழிந்தது (யாத் 16:31; யோசு 5:12), அவர்கள் வேலை செய்து சாப்பிட வேண்டியதாக இருந்தது.
        **ii.** இலவசமாய் சாப்பிடுவது என்பது மோசமான காரியமாய் இருக்கிறது. ( 2 தெச 3:8-10)
        **iii.** நாம் வேலை செய்து, சொந்த சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும் என்கிற கட்டளையை பெற்றிருக்கிறோம். (2 தெச3:12; எபே 4:28)
            **1.** கிரேத்தா தீவார் சோம்பேறிகளாய் இருந்தனர், (தீத் 1:12); ஆனால் அவர்கள் நற்கிரியைகளை செய்ய பழக வேண்டியதாக இருந்தது. (தீத் 3:8)
    c. **நாம் ஏன் பணத்தை சம்பாதிக்க வேண்டும் என்கிற நோக்கத்தை புரிந்துக்கொள்ள வேண்டும்:**
        **i.** நம்முடைய தேவைகளுக்கும், குடும்ப தேவைகளுக்கும் பணத்தை நாம் சம்பாதிக்க வேண்டும் ( 1தீமோ 5:8; 1 தெச 4:11-12)
            **1.** உணவு, உடை, இருப்பிடம், ஆரோக்கியம், கல்வி, போக்குவரத்து போன்ற மற்ற தேவைகளுக்கு
        **ii.** பெற்றார் செய்த நன்மைக்கு பதில் நன்மைகளை செய்ய; அதாவது பெற்றோர்களை நன்றாக பார்த்துக்கொள்ள ( 1தீமோ 5:4; மத் 15:3-6)
        **iii.** அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டும் (ரோம 13:1-3)
        **iv.** விதவைகள், திக்கற்றவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் (யாக் 1:27; கலா 6:10)
        **v.** தேவனுடைய இராஜ்யத்திற்கு கொடுப்பதற்கு நாம் சம்பாதிக்க வேண்டும் ( 1 கொரி 16:1-2; கலா 6:6; 1 கொரி 9:10-14)
        **vi.** நம்முடைய, குடும்ப எதிர்காலத்திற்கு பணத்தை சேர்க்க (யாக் 4:13-15; நீதி 6:6-11)

2. **சரியான முறையில் தேவனுடைய தலைவர்களாய் நாம் பணத்தை சம்பாதிக்க வேண்டும் (நீதி 16:8; எரே 4:28)**
    a. நான் பணத்தை சம்பாதிக்கிறது தேவனுக்கு மகிமையானதாக இருக்க வேண்டும் ( 1கொரி 6:19,20; 1கொரி 10:31)
    b. நாம் பணத்தை சம்பாதிக்க கூடாத முறைகள்:
        i. அநீதியினால் வரும் எல்லாம் பாவமே ( 1 யோவா 5:17)
            1. உதாரணம்: பிலேயாம் ( 2பேது 2:15)
            2. பரிதானம் (நீதி 15:27)
            3. வஞ்சனையால் (நீதி 13:11)
            4. தகப்பனையும், தாயையும் ஏமாற்றி (நீதி 20:20)
            5. திருடுதல் (நீதி 29:24)
            6. அநியாய வட்டி (நீதி 28:8)
        ii. தேவனை தள்ளிவிட்டு பணத்தை சேர்க்க கூடாது. ( 1 தீமோ 6:10; மத் 6:33)
            1. உதாரணம்: தேமா ( 2தீமோ 4:10)
        iii. கள்ள உபதேசத்தினால் பணம் சம்பாதித்தல் ( 2பேது 2:3; ரோம 16:18)
    c. நாம் நேர்மையான முறையில் தேவனுக்கு பிரியமாய் அவருக்கு மகிமை கொண்டு வரும் விதத்தில் பணம் சம்பாதிக்க வேண்டும் (கொலோ 3:22-25)
        i. நம்முடைய வேலையினால் தேவனுடைய நாமமும், உபதேசமும் தூஷிக்கபட கூடாது ( 1 தீமோ 6:1; தீத் 2:9)
        ii. எஜமான்களாய் இருக்கிறவர்களுக்கு தேவனுக்கு பயந்து வேலை செய்ய வேண்டும் (கொலோ 4:1; ரோம 12:9)
        iii. மனரம்மியமாக இருக்க வேண்டும் (பிலி 4:11; 1 தீமோ6:6).

## IV. தேவனுடைய தலைவர்களாய் பணத்தை சரியான முறையில் கையாளுதல் (பயன்படுத்துதல்)

1. **வீண் புகழ்ச்சிக்காக பணத்தை செலவுப்பண்ண கூடாது (கலா 5:25; பிலி 2:3)**
    a. தன்னை தானே பெரியவர்களாய் காண்பிக்க நாம் பணத்தையும், பொருள்களையும் பயன்படுத்த கூடாது. (யாக் 2:1-5)
        i. உதாரணம்: தேவாலயத்திற்கு போன பரிசேயன் தன்னுடைய காணிக்கையை பெரிதாக காண்பித்தான் (லூக் 18:9-11)
        ii. உதாரணம்: தங்களை மற்றவர்களை விட பெரியவர்கள் என காண்பிக்க மக்கள் கடன் வாங்கியும் செலவு செய்கிறார்கள் (நீதி 22:16)
    b. இச்சைகளை நிறைவேற்ற செலவழிக்க கூடாது? (நீதி 29:3; யாக் 4:3)
        i. உதாரணம்: இளைய குமாரன் (லூக் 15:13,30)
    c. அர்த்தமற்ற, தேவையில்லாத செலவுகளை தவிர்க்க வேண்டும் (நீதி 21:20)
        i. உதாரணம்: சோம்பேறித்தானத்தினால் பணத்தை அதிகமாக ஜனங்கள் வீணான முறையில் பயன்படுத்துகின்றன. (நீதி 10:26)
2. **நமது தேவைக்காக பணத்தை செலவு செய்ய வேண்டும் (அப் 20:34; எபி 4:28)**
    a. தேவன் நமக்கு தேவைகளின் படியே கொடுக்கிறார் (மத் 6:8)
        i. தேவன் நம்முடைய தேவைகளை அறிந்திருக்கிறார் (மத் 6:32), நாம் தேவனை தேடும் போது இவைகள் நமக்கு கொடுக்கப்படுகிறது.
        ii. உதாரணம்: ஆகூரின் ஜெபம் (நீதி 30:7-9)
        iii. இயேசு கிறிஸ்து தேவை இருந்ததினால் வந்தார் (மத் 9:12; எபி 2:14-15)

iv. யோவான் ஸ்நானகன் தேவையின் நிமித்தம் வந்தார் (யோவா 1:8)

b. **நம்முடைய விருப்பத்திற்காக பணத்தை செலவிடாமல்; நம்முடைய தேவைக்காக பணத்தை செலவிட வேண்டும். (பிலி 4:11)**

i. இயேசு கிறிஸ்து நமக்கான மாதிரியாக இருக்கிறார்

1. அவரின் தேவையின் அடிப்படையில் கழுதையை வாங்கினார் (மத் 21:2,3)
2. தன்னுடைய வல்லமையையும் தேவைக்காக பயன்படுத்தினார் (லூக் 9:11)
3. உதாரணம்: 5000 பேரை போஷித்தல் (யோவா 6:11,12)

ii. நாம் நம்முடைய இலக்குகளை அடைய பணத்தை தேவையான முறையில் செலவிட வேண்டும்.

3. **நாம் நம்முடைய பணத்திற்கு அர்த்தம் கொடுக்க வேண்டும் (லூக் 16:9; 1 தீமோ 6:19)**

a. நம்முடைய பணத்திற்கு அர்த்தம் கொடுக்க அதை நாம் தேவனுக்காக பயன்படுத்த வேண்டும் (மத் 25:40)

i. **தேவனுடைய ஊழியத்திற்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஆராதனையில் ஒரு பகுதியாக இருக்கிறது ( 1 கொரி 16:1,2)**

1. நாம் கொடுக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார் ( 2 கொரி 9:7), நாம் கொடுக்கிறது நாம் தேவன் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறோம் என்பதை காண்பிக்கிறது. ( 2 கொரி 8:8)
   a. உதாரணம்: மரியாள் (யோவா 12:3-8; மத் 26:6-13)
   b. உதாரணம்: 2 காசு போட்ட விதவை (லூக் 21:1-4)
   c. உதாரணம்: மக்கெதோனியா நாட்டு சபையார் ( 2கொரி 8:1-5)
2. கொடுப்பதில் இயேசு கிறிஸ்துவே நமக்காக மிகப்பெரிய மாதிரியாக இருக்கிறார் (எபே 5:2)
   a. தேவன் நமக்காக தன்னுடைய குமாரனையே கொடுத்திருக்கிறார் (யோவா 3:16)
   b. இயேசுவின் கொடுத்தல் சிந்தையே நம்முடைய கொடுத்தல் சிந்தையாக இருக்க வேண்டும் (பிலி 2:5)
   c. இயேசு தன்னைதானே விருப்பத்தோடு; கொடுத்தது போல நாம் விருப்பத்தோடு கொடுக்க வேண்டும் ( 2 கொரி 9:6,9)
3. பரிசுத்தவான்களின் குறைவுகளை நிறைவாக்கி, ஆசிர்வாதங்களை பெற்றுக்கொண்ட அநேக உதாரணங்கள் பழைய ஏற்பாட்டில் இருக்கிறது; நாம் பழைய ஏற்பாட்டை விட மேன்மையான பிரமாணத்தின் கீழ் இருக்கிறோம் (எபி 8:6)
   a. உதாரணம்: சாறிபாத் விதவை ( 1 இராஜா 17:10-24)
   b. உதாரணம்: சுனேமியாள் ஸ்தீரி ( 2 இராஜா 4:9-36)
4. நாம் ஊழியர்களை தாங்க வேண்டும் (கலா 6:6)
   a. சுவிசேஷத்தை பிரசங்கிக்கிறவர்களுக்கு, சுவிசேஷத்தினால் பிழைப்புண்டாக்க வேண்டும். ( 1கொரி 9:10-14)
5. நாம் நற்கிரியைகளை செய்ய வேண்டும் (தீத் 3:8,14)
   a. ஏழைக்களுக்கும், திக்கற்றவர்களுக்கும், விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டும் (யாக் 1:27)

4. தேவனுக்காக, தன்னுடைய பணத்தை உண்மையாய் செலவிடாதவர்களை தேவன் கண்டித்திருக்கிறார் (மல் 3:8-10)
    a. உதாரணம்: மீண்டும் தேவனுடைய ஆலயத்தை கட்டுவதில் இஸ்ரவேல் ஜனங்கள் (ஆகாய் 1:4-10)

# பாடம் -3

## குடும்பத்தில் தலைமைத்துவம்

தேவன் மனிதர்களை ஆணும், பெண்ணுமாக படைத்ததற்கான (ஆதி 1:27-28; ஆதி 2:24), நோக்கங்களில் முக்கியமானதாக குடும்பம் இருக்கிறது, அதாவது தேவபக்தியுள்ள சந்ததி பெறுதல் என்பது தேவனுடைய நோக்கமாக இருக்கிறது (மல் 2:15). தேவபக்தியுள்ள சந்ததி வர வேண்டுமானால்; தேவ பக்தியுள்ள குடும்பங்கள் இருக்க வேண்டும்; தேவபக்தியுள்ள குடும்பங்கள் இருக்க வேண்டுமானால்; தேவபக்தியுள்ள கணவன், மனைவி இருக்க வேண்டும்.

இந்த பாடமானது குடும்பத்தில் இருக்கிற கணவன், மனைவி என்கிற இரு நபர்கள் எப்படி ஒரு தேவனுடைய தலைவர்களாய் இருக்க வேண்டும் என்பதையும், எப்படி தேவபக்தியுள்ள சந்ததியை பெற தன்னுடைய குடும்பத்தை வழி நடத்த வேண்டும் என்பதை பற்றி கவனம் செலுத்துகிறது.

**I. குடும்பத்தில் ஆண்களுக்கான தலைமைத்துவம் (1 தீமோ 5:8)**

1. **புருஷனாயிருங்கள் (1 கொரி 16:13)**
   a. **புருஷனாயிருங்கள் என்பது குழந்தைகளைப் போல இருக்காதீர்கள் என்பதை கூறுகிறது. ( 1கொரி 13:11)**
      i. புருஷன் என்பது தேறினவன், வளர்ந்த ஒரு மனிதனை காண்பிக்கிறது.
      ii. யோசிக்கிறதில் தேறினவன், யோசித்து செயல்படுகிற ஒருவன் (1 கொரி 14:20)
      iii. பொறுப்புகளுடைய மனிதனை காண்பிக்கிறது (யோபு 40:7)
      iv. கடமைகளையுடைய, வழி நடத்தும் மனிதனை காண்பிக்கிறது ( 1 பேது 3:7)
      v. புருஷன் போஷிக்க கூடியவனாக இருக்கிறான் (எபே 5:29; ஆதி 3:17,18)
      vi. புருஷன், முடிவெடுக்கவும், விளைவுகளை எதிர்க்கொள்ளவும் செய்வான் ( 1கொரி 11:3; 2 தீமோ 2:3)
   b. **நவீன உலகம் ஆண்களை புருஷனாயிருப்பதிலிருந்து விலக்கிவிடுகிறது.**
      i. புருஷனாயிருக்க வேண்டிய ஆண்களை பெண்களாக மாற்றுகிறது ( 1 கொரி 11:3; ஏசா 4:1)
      ii. புருஷனாயிருப்பது என்பது விளையாட்டு பிள்ளையாய் இருப்பது என்பது போல இந்த உலகம் காண்பிக்கிறது.
      iii. புருஷனாயிருப்பவன் மதுபானம் பண்ணுகிறவனாக, புகையிலை, சிகரெட் பயன்படுத்த கூடியவனாக இருப்பான் என்பதை இந்த உலகம் தவறாக கற்றுக்கொடுக்கிறது.
      iv. புருஷனாயிருக்கிறவன் சாலையில் இறங்கி சண்டைப் போடுகிறவனாக இருப்பான் என்பதை போல இந்த உலகம் காண்பிக்கிறது.
2. **தேவனுடைய தலைவனாக கணவன் (எபே 5:23)**
   a. தேவன் மனைவிகளை கணவர்களுக்காக படைந்திருக்கிறார்; நாம் தலையாக இருப்பதால், அவர்களின் மீது பொறுப்புடையவர்களாய் இருக்கிறோம். ( 1கொரி 11:9).
      i. **நாம் மனைவிகளை நேசிக்க வேண்டும் (எபே 5:28; பிர9:9)**
         1. உதாரணம்: யாக்கோபு ராகேலுக்காக 14 வருடம் வேலை செய்தான். (ஆதி 29:17-30)
         2. அன்பு தீங்கு நினையாது ( 1கொரி 13:5)

a. நாம் நம்முடைய மனைவிகளை நேசிக்கிற படியால் அவர்களுக்கு துரோகம் செய்ய கூடாது. (நீதி 5:18,19; மல் 2:14,15).

3. அன்பு சகலத்தையும் சகிக்கும் ( 1 கொரி 13:7)

a. நாம் நம்முடைய மனைவிகளிடம் அன்பு கூறுவதால், அவர்களுடைய பலவீனங்களில், நாம் உதவி செய்ய வேண்டும். (கொலோ 3:19)

1 உதாரணம்: எல்க்கானா ( 1 சாமு 1:4-8)

4. அன்பு சகலத்தையும் நம்பும் ( 1கொரி 13:7)

a. மனைவியை சந்தேகப்படுகிறது என்பது மோசமான காரியமாக இருக்கிறது, புருஷர்கள் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (தீத் 2:6)

5. அன்பு சத்தியத்தில் சந்தோஷப்படும் (1 கொரி 13:6)

a. நாம் நம்முடைய மனைவியோடு தன்னுடைய வாழ்நாளை சந்தோஷமாய் அனுபவிக்க வேண்டும். (பிர9:9).

b. நேர்மையான வழியில் சந்தோஷத்தை அநுபவிக்க வேண்டும். (நீதி 5:15)

ii. **நாம் அவர்களை போஷிக்க வேண்டும் (எபே 5:24)**

1. மனைவிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய நாம் வேலை செய்ய வேண்டும் (ஆதி 3:16,17)
2. உதாரணம்: இயேசு சபையை போஷிக்கிறது போல (எபே 5:27)
3. உதாரணம்: தலை எப்படி சரீரத்தின் தேவைகளை பூர்த்தி செய்கிறது.
4. அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை செய்ய வேண்டும் ( 1கொரி 7:3)

iii. **அவர்களுக்கு கனத்தையும், மரியாதையும் கொடுக்க வேண்டும் ( 1 பேது 3:7)**

1. ஆணும், பெண்ணும் தேவனுடைய பார்வையில் சமமாயிருக்கிறார்கள் ( 1 கொரி 11:11,12; கலா 3:28; கொலோ 3:11).
2. ஸ்திரியில்லாமல், எந்த புருஷனும் வரவும், உருவாகவும் முடியாது.
3. புருஷர்களாய் நாம் மனைவிகளை கணமாய் நடந்த வேண்டும்.

a. இயேசு கிறிஸ்து சபைக்கு கனத்தை கொடுத்திருக்கிறார் (எபே 5:27)

b. இயேசு கிறிஸ்து சபைக்கு பரிசுத்தவான் என்கிற பெயரை கொடுத்திருக்கிறார் ( 1கொரி 6:11)

c. மோசமான உதாரணம்: அகாஸ்வேரு (எஸ்தர் 1:10-12)

d. உதாரணம்: போவாஸ் (ரூத் 2:11,12)

iv. **நாம் அவர்களை பாதுகாக்க வேண்டும் (எபே 5:29)**

1. உதாரணம்: இயேசு சபையை காப்பற்றுகிறார்
2. மனைவிகள் பரலோகம் செல்ல அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும் ( 1பேது 3:7)
3. உதாரணம்: தாவீது ( 1சாமு 30:5,6 = 30:18)

3. **தேவனுடைய தலைவனாக தந்தை (நீதி 22:6; நீதி 17:6)**

a. நல்ல தகப்பனாக பிள்ளைகளை வளர்க்க வேண்டும் (எபே 6:4)

b. நல்ல தகப்பனாக இருக்க நாம் வேதாகமத்தை பார்க்க வேண்டும்.

c. **தகப்பனாய் நாம் நம்முடைய பிள்ளைகளை கர்த்தருகேற்ற போதனையில் வளர்க்க வேண்டும் (எபே 6:4)**
    i. உதாரணம்: ஆபிரகாம் (ஆதி 18:16-19)
        1. தன்னுடைய பிள்ளைகளை தேவனுக்கு பிரியமாக வழி நடத்தினான் (எபி 11:9-16)
    ii. உதாரணம்: நோவா தன்னுடைய குடும்பத்தை இரட்சிக்க பேழை உண்டுபண்ணினான் (எபி 11:7; 1 பேது 3:20)
    iii. உதாரணம்: யோபு (யோபு 1:5)
    iv. நாம் பிள்ளைகளுக்கு தேவனை பற்றியும், ஆராதனைப்பற்றியும், உபதேசத்தையும் கற்று கொடுத்து, அவர்களை அதின்படி வளர்க்க வேண்டும் (சங் 78:4-8; உபா 6:7; யாத் 12:26-27)

d. **பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்க்க வேண்டும் (எபே 6:4)**
    i. நாம் அவர்களை திடனற்று போக செய்ய கூடாது (கொலோ 3:21)
    ii. பிதாக்கள் பிள்ளைகளை கண்டு கொள்ளாமல் விடுவது ஆபத்தானது (நீதி 17:21; நீதி 23:24)
        1. தகப்பன்மார்க்கள் பல நேரங்களில் தன் பிள்ளைகளுடன் தன் நேரத்தை செலவிடுவதில்லை.
        2. பணத்தை சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டு, பிள்ளைகளுடன் நேரத்தை செலவிடாத காரணத்தினால், பிள்ளை தவறான முறையில் வளர்க்கிறார்கள்
        3. பிள்ளைகளை சீர்பண்ணுவது தகப்பனுடைய வேலையாக இருக்கிறது (நீதி 3:12)
            a. நாம் அவர்களை சிட்சித்து நடத்த வேண்டும் (நீதி 22:15)
            b. நாம் அவர்களுடைய நல்ல குணத்திற்கும், நல்ல செயல்களுக்காக பாராட்ட வேண்டும்.
            c. "தகப்பனாகவும், கணவனாகவும் ஒருவன் தோற்றால் அவனால் ஆணாக வெற்றிக்கொள்ள முடியாது"

## II. குடும்பத்தில் பெண்களுக்கான தலைமைத்துவம் ( 1தீமோ 5:14).

1. **விலையறறப்பட்ட பெண்களை குறித்து வேதம் நமக்கு கூறியிருக்கிறது.**
    a. குணசாலியான ஸ்திரி முத்துக்களை பார்க்கிலும் உயர்ந்தவள் (நீதி 31:10)
        i. அழியாத அலங்கரிப்பாயிருக்கிற இருதயத்தில் மறைந்திருக்கிற நல்ல குணங்கள் தேவனுக்கு விலையேறப் பெற்றது ( 1பேது 3:4)
            1. உதாரணம்: ஈசாக்கின் மனைவி (ஆதி 24:15-67)
    b. அவள் கீரிடத்தை போன்றவள் (நீதி 12:4)
    c. அவள் கர்த்தருக்கு பயப்படுகிற படியால் புகழ்ப்படுகிறாள் (நீதி 31:29,31)
        i. அவள் தன்னுடைய பிள்ளைகளுக்கு கர்த்தருக்கு பயப்படுவதை கற்றுக்கொடுக்கிறாள் (நீதி 31:26)
        ii. உதாரணம்: மரியாள் (லூக் 1:27-48)
        iii. உதாரணம்: எபிரெய மருத்துவச்சிகள் (யாத் 1:2)
        iv. உதாரணம்:பெபேயாள் (ரோம 16:1,2)

d. அழகை பார்க்கிலும் ஞானம், அறிவு முக்கியம்: (நீதி 11:22)
    i. அவள் வீட்டை கட்டுகிறாள்
    ii. அவள் கர்த்தருடைய ஈவு (நீதி 19:14)
    iii. தேவனுடைய அறிவை பெற்ற ஸ்திரி விலையேறப்பட்டவள்

2. **மனைவியாக பெண்: (நீதி 18:22)**
    a. **மனைவிகள், ஆண்கள் அடிமை என தேவன் தேவனுடைய பார்வையில், கணவன், மனைவி இரண்டு நபர்களுக்கு சமமாக இருக்கிறார். ( 1கொரி 11:11,12)**
        i. இயேசு கிறிஸ்து பிதாவுக்கு சமமானவராய் இருந்தும், அவருக்கு எல்லா காரியத்திலும், கீழ்படித்தார் (பிலி 2:4-8), அதைப்போலவே புருஷர்களுக்கு மனைவிகள் கீழ்படிய வேண்டும். ( 1கொரி 11:3)
        ii. உதாரணம்: கணவன் தலையாகவும், மனைவி சரீரமாயும் இருப்பதால், சரீரம் தலையின் கட்டளைக்கு கீழ்ப்படிவதைப்போல மனைவி கீழ்படிய வேண்டும் (எபே 5:22-23)
        iii. உதாரணம்: சாராள் ( 1 பேது 3:6)
        iv. மனைவியின் கற்புள்ள நடக்கையின் மூலம் கணவன் ஆதாயப்படுத்தி கொள்ளப்படுவாரகள் ( 1பேது 3:1,2)
    b. **வீட்டை நடத்த கூடியவர்களாக மனைவிகள் இருக்கின்றனர் ( 1திமோ 5:14)**
        i. தலையாக இருக்கிற கணவன் முடிவு எடுக்க கூடியவனாக இருக்கிற நிலையில், அதை செயல்படுத்தும் நிலையில் சரீரமாகிய மனைவி இருக்கிறார் (எபே 5:28).இப்படியாக இவர்கள் ஒரே மாம்சமாக இருக்கிறார்கள் (மத் 19:5)
        ii. வீட்டை கட்டுவது புத்தியுள்ள ஸ்திரியாக இருக்கிறார்கள் (நீதி 14:1)
        iii. மோசமான உதாரணம்: யேசபேல் ( 1இராஜா 21:7-8)
        iv. மோசமான உதாரணம்: ஏவாள் ஆதாம் (ஆதி 3:17)
    c. **மனைவியாக தன்னுடைய கணவனை நேசிக்க கூடியவர்களாய் இருக்க வேண்டும் (தீத் 2:4)**
        i. பார்க்கவும் ( 1 கொரி 7:3-5)
    d. **பிள்ளை வளர்க்க வேண்டிய நிலையில் தாயாக பெண்கள் இருக்கின்றனர் ( 1தீமோ 5:10; தீத் 2:4)**
        i. உதாரணம்: தீமோத்தேயுவின் தாயும், பாட்டியும் ( 2தீமோ 1:4,5; 2 தீமோ 3:15)
        ii. தாயாக பிள்ளைகளை தேவனிடம் கொண்டு வர வேண்டும் ( 1 சாமு 1:28)
        iii. அவர்களுக்கு போதிக்க வேண்டும் (தீத் 2:5)
        iv. மோசமான உதாரணம்: 2 நாளா 22:3

3. ஒரு பெண்ணால் வீட்டை கட்டவும் முடியும், இடித்துபோடவும் முடியும்; குடும்பத்தில் தலைமைத்துவத்தில் அவர்களுக்கு முக்கியமான பங்கு இருக்கிறது.

# பாடம் - 4

## தலைமைத்துவம் மற்றும் ஆளுமை (தனித்தன்மை) மேம்படுத்தல்

**ஆளுமை என்பது என்ன?**

ஒருவரை மற்றவர்களிடமிருந்து வேறுப்படுத்தி காண்பிக்கும் பண்புகள், தனித்தன்மை. குணநலன்கள், உணர்வுகள் உள்ளடங்கியதாக ஆளுமை இருக்கிறது. இந்த ஆளுமையை நாம் மேம்படுத்த முடியும். வேதாகமத்தின் மூலம் தேவனுடைய தலைவர்களாயிருக்கிற நம்முடைய தனித்தன்மை மேம்படுத்தி கொள்வதே இந்த பாடத்தின் நோக்கம்.

வாழ்க்கை எப்பொழுது இனிதாக இருப்பதில்லை, சூழல் மிக இக்கட்டாக இருக்கலாம்; பிரச்சனைகள், சவால்கள் மிகுந்ததாக இருக்கலாம், ஆனால் இவை அனைத்தையும் சமாளிக்கும் தெளிவும், மனோதிடமும் தேவனுடைய தலைவர்களாய் இருக்கிற நமக்கு வேண்டும். இவற்றை நமக்கு கொடுப்பது தான் வேதாகமம், வேதாகமத்திலிருந்து தலைமைத்துவ பண்புகளை கற்றுக்கொண்டு கொண்டு இருக்கிறோம்.

அப்படியானால், தலைமைப் பண்பு என்பது பிறரை வழி நடத்துவது இல்லையா? என்றால் தன்னை ஆள முடியாதவர் தலைவராக முடியுமா?

**நாம் ஏன் நம்முடைய தனித்தன்மை மேம்படுத்தி கொள்ள வேண்டும்?**

வீட்டில் நீங்கள் செல்லப் பிள்ளையாக இருந்திருக்கலாம், உங்கள் விருப்பங்கள் அனைத்தும் அங்கே பூர்த்தி செய்வதற்கு ஆட்கள் இருந்திருக்கலாம், நீங்கள் விழுவதற்கு முன்பே தூக்கிப் பிடிக்கவும் அன்பானவர்கள் உங்களுக்கு இருந்திருக்கலாம், உங்கள் தவறுகளை உங்கள் மனம் கோணாமல் கண்டிக்கிறவர்கள் இருந்திருக்கலாம், ஆனால் வெளி உலகம் கண்டிப்பாக இதற்கு நேரெதிரானது உங்களை இந்த சமுதாயம் பந்தாடும் எனவே உலகை தேவனுடைய பிள்ளையாக எதிர்கொள்வதற்கும், கீழே விழுந்தாலும் தானே எழுந்து நிற்கவும் நமக்கு திறன்(பலம்) வேண்டும். அதற்கு நம்மை ஆளுமை (தனித்தன்மையை) நாம் வளர்க்க வேண்டும்.

நாம் எல்லாரும் இயேசுவைப்போல மாறுவதே(வாழ்வதே) நம்முடைய இலக்காக இருக்க வேண்டும். அதற்கு நம்முடைய ஆளுமை அவரை மாற்றிக்கொள்ள வேண்டும் (ரோம 12:2)


**I. நம்முடைய மனப்பான்மையை (Attitude) மேம்படுத்த வேண்டும்:**

1. மனப்பான்மை என்பது என்ன?
    a. ஒருவர் சிந்திக்கிற, எண்ணுகிற (அ) நடத்துக்கொள்கிற முறை; மனப்பான்மை; எண்ணப்போக்கு, நடத்தை முறை,
2. **நேர்மையான மனப்பான்மையுடையவர்களாய் இருங்கள்: (பிலி 4:13)**
    a. **“முடியும்” என்பது நேர்மறையான எண்ணமாக இருக்கிறது (மத் 19:26)**
        i. உதாரணம்: காலேப் (எண் 13:30; 14:9)
        ii. உதாரணம்: பெலிஸ்தர்கள் ( 1சாமு 4:7-11)
        iii. “முடியும்” என்பதே அதவாது நேர்மறையான எண்ணமே நம்மையும், மற்றவர்களையும் வேறுப்படுத்தி காண்பிக்கிறது (எண் 14:24)
        iv. உதாரணம்: கப்பற்சேதத்தில் பவுல் (அப் 27:24,25)

b. **நேர்மறையான எண்ணத்திற்கும் நம்முடைய விசுவாசத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது (எபி 11:1)**

i. நம்பப்படுகிறவைகளின் "உறுதி"யாக விசுவாசமிருக்கிறது

1. உதாரணம்: இரண்டு குருடர்கள் (மத் 9:27-29)
2. உதாரணம்: கானானிய பெண்மணி நேர்மறையான எண்ணமுடையவனாய் இருந்தாள் (மத் 15:22-28)
3. உதாரணம்: 12 வருவடம் பெரும்பாடுள்ள ஸ்திரி இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாள் சுகம் கிடைக்கும் என்று நேர்மறையான எண்ணமுடையவனாய் இருந்தாள், அவள் இதை தனக்கு தானே கூறினாள்! (மாற் 5:27-29)
4. உதாரணம்: சாராள் தேவன் உண்மையுள்ளவர் என எண்ணி, பெலனடைந்தாள் (எபி 11:11)



c. **சந்தேகப்படுகிறவர்களையும், இருமனமுடையவர்களையும் தேவன் விரும்புவதில்லை (யாக் 1:6-8)**

i. முடியுமா? முடியாதா போன்ற எண்ணங்கள்; நேர்மறையான எண்ணங்கள் இல்லை (மாற் 11:23,24)

ii. **தேவன் நம்மோடிருக்கிறார், நம்மால் முடியும் என்று காரியத்தை செய்ய வேண்டும்.**

1. உதாரணம்: யோசபாத் நியாயாதிபதிபகளை பார்த்து திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள் உத்தமனுக்கு கர்த்தர் துணை என்றான் ( 2நாளா 19:11)
2. உதாரணம்: கிதியோன் மீதியானவரை வீழ்த்துதல் (நியா 7:1-25)

iii. **நாம் ஜெயம் கொள்கிறவர்களாக இருக்கிறோம் (ரோம 8:37), ஜெயங்கொள்கிறவனுடைய மனப்பான்மை எப்படிபட்டதாக இருக்கும் ? (1 கொரி 9:24-26)**


1. நமக்கான வெற்றியை தேவன் தருகிறார் (நீதி 21:31; 1 கொரி 15:57)
2. நாம் சிறைப்பட்ட கைதிகள் இல்லை; பாவத்தை இயேசுவின் ஜெயிக்க முடியும் ( 2கொரி 10:3-5)
3. கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ கழுகுக்கு ஒப்பிடப்பட்டுள்ளன (ஏசா 40:311)
    a. கழுகுகள் பயப்படாதா மற்றும் ஒருபோதும் கைவிடாதா பலமான பறவையாக இருக்கிறது.
    b. உதாரணம்: சாத்ராக், மேஷக், ஆபேத்நேகூவின் வார்த்தைகள் (தானி 3:15-18)
    c. ஜெயம் கொள்கிறவர்கள் விட்டுக்கொடுக்கமாட்டாரகள், நம்முடைய விசுவாசத்திற்காக நாம் சண்டைப்போட வேண்டும் (யூதா 3)

d. உதாரணம்: தாவீது கோலியாத்தை வெற்றிக் கொள்ளும் முன்பு அவனுடைய வார்த்தைகள் ( 1சாமு 17:45-47)

4. **நாம் தேவனுடைய பிள்ளைகள், ஜெயம் கொள்ளுகிறவனுடைய மனப்பான்மை எடுத்துக்கொள்ள வேண்டும் (நீதி 21:7).**

3. **விடா முயற்சியுடைய மனப்பான்மையை நாம் வளர்க்க வேண்டும் ( 2கொரி 4:16; நீதி 24:16)**

a. **தேவனுடைய தலைவர்களாய் இருக்கிறவர்கள்; தேவனுடைய காரியங்களில் விட்டுக்கொடுக்கிறவறாக இருக்க கூடாது.**




i. உதாரணம்: யாக்கோபு (சங் 24:6; ஆதி 32:24-29)

ii. உதாரணம் பிலதெல்பியா சபை (வெளி 3:8,10,12)

iii. உதாரணம்: இயேசுவின் உபதேசத்தை கேட்டு விட்டு போன யூதர்களும், விட்டுக்கொடுக்காத பேதுருவும் (யோவா 6:60-69)

b. நாம் நம்முடைய போராட்டத்தில் சோர்ந்து போகிறவர்களாய் இருக்க கூடாது, பிசாசினால் நம்முடைய இரட்சிப்பை இழந்துபோகிறவர்களாய் இருக்க கூடாது (எபி 12:3; எபி 12:12,13)

i. உதாரணம்: தாவீது தேவனுடைய உடன்படிக்கை பெட்டியை கொண்டு வருதல் ( 2 சாமு 6; 1 நாளா16:11)

ii. உதாரணம்: பெர்கமு சபை (வெளி 2:13)

c. **விடா முயற்சிடையவர்களாய் இருக்க திட மனது வேண்டும் (சங் 27:14)**

i. உதாரணம்: அசரியாவின் வார்த்தைகளை கவனியுங்கள் ( 2 நாள 15:7,8)

ii. நம்மை தடைப்பண்ணுகிறவர்கள் இருக்கிற போதிலும், நாம் சத்தியத்தின் படி நடக்க நம்முடைய இருதயத்தை தயார் செய்ய வேண்டும் (சங் 86:11)

1. உதாரணம்: வயதான பேதுரு ( 2 பேது 1:14)

d. **சேர்ந்துப்போன நேரத்தில் தேவனை நோக்கி பார்த்து பலன் அடைய வேண்டும் (ஏசா 40:28-31)**

i. தேவன் நம்மை எப்பொழுதும் கைவிடுவதில்லை (ஏசா 46:3-4)

ii. நாம் தேவனோடு இருந்தால், அவர் நம்மோடு இருப்பார் ( 2தீமோ 2:11-3)

1. உதாரணம்: இஸ்ரவேல் ஜனங்களுக்கான எச்சரிக்கை (லேவி 26:15-17)

2. உதாரணம்: அசரியாவின் வார்த்தைகள் (2 நாளா 15:2)

iii. பிலிப்பியர்க்கு பவுல் கூறின வார்த்தைகள் நம்மை உத்வேகப்படுத்துகிறது "அவரை நம்புங்கள்" (பிலி 1:5)

4. **ஆவிக்குரியவனுக்குரிய மனப்பான்மைவுடையவர்களாக இருக்க வேண்டும் ( 1 கொரி 2:15)**

a. நாம் உலகத்தின் ஆவியை பெறவில்லை ( 1கொரி 2:11; 1 யோவா 4:4,5)

b. **நாம் சத்திய ஆவியை பெற்றிருக்கிறோம் ( 1யோவா 2:27; 1 யோவா 4:6)**

i. தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கிறது (கொலோ 3:16)

ii. அந்த சத்தியம் நம்மை சத்தியத்தின் படி நடத்தும் (யோவா 16:13,14)

iii. உதாரணம்: விஷேசித்த ஆவியை உடைய யோசேப்பும், தானியேலும் (ஆதி 41:38; தானி 5:14)
iv. உதாரணம்: மாம்ச சிந்தையாயிருந்த இஸ்ரவேலரை போல இருக்க கூடாது (யாத் 16:3; எண் 11:1-6)

c. **சரியான மனப்பான்மையுடைவனாகிய ஆவிக்குரியவன் தெளிவான பார்வையுடையவனாக இருக்கிறான் (பிர 2:14; 1 பேது 1:13)**
   i. உதாரணம்: கோலியாத்தோடு யுத்தத்தில் தாவீது தெளிவான பார்வையுடையவனாக இருந்தான் ( 1சாமு 17:45)
   ii. இயேசு சுகப்படுத்திய குருடரின் தாயும், தகப்பனும் தெளிவாக இல்லை (யோவா 9:20-23)
      1. உதாரணம்: நெகேமியா (நெகே 6 அதி)
   iii. அவன் தன்னை தானே நிதானித்து பார்ப்பான் ( 1கொரி 10:15; 1 கொரி 11:28,31)
   iv. தேவனுடைய கண்ணோட்டமே, அவனுடைய கண்ணோட்டம் ( 2கொரி 3:17,18)

5. **வளர்ச்சி அடையும் மனப்பான்மை உடையவர்களாய் இருக்க வேண்டும் (1 பேது 2:3)**
   a. உதாரணம்: பெரேயா பட்டணத்தார் (அப் 17:11)
   b. நான் இப்படிதான், மாற மாட்டேன் என்கிற மனபான்மையினால், பலகாரியங்கள் இழக்க வேண்டும்
   c. நாம் புதிதாக்கப்பட்டு கொண்டு இருக்க வேண்டும் ( 2 கொரி 4:16).

**II. நம்முடைய தனித்தன்மை மேம்படுத்த நம்முடைய நாம் நம்முடைய சுய ஒழுக்கத்தை மேம்படுத்த வேண்டும்.**

1. **நாம் நம்முடைய சரீரத்தை சரியாய் பார்த்துக் கொள்ள வேண்டும் ( 1தெச 4:5)**
   a. நாம் நம்முடைய சரீரத்திற்கு கனம் கொடுக்க வேண்டும்.
      i. தேவன் நம்முடைய சரீர உறுப்புகளை அதிசயமாய் படைத்திருக்கிறார், அதை நாம் கனமாக ஆண்டுக்கொள்ள வேண்டும். (சங் 139:14)
         1. தண்ணீர் அதிகமாக குடிக்க வேண்டும்
         2. காலையில் இராஜாவை போல சாப்பிட வேண்டும், மதியம் இளவரசரைப்போல சாப்பிட வேண்டும, இரவு தர்மம் எடுப்பவரை போல சாப்பிட வேண்டும்
         3. காய்கறிகளையும், பழங்களையும் சாப்பிட வேண்டும்
         4. அதிக நேரம் ஜெபம் செய்ய வேண்டும்
         5. விளையாட நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்
         6. வாசிக்கிற பழுக்கம் மேம்படுத்துங்கள்
         7. 7 மணி நேர தூக்கம் வேண்டும்
         8. 10-30 நிமிடங்கள் தினமும் நடை பயிற்சி செய்யவும்.
         9. சிரிக்க வேண்டும்
   b. சரீரத்தை கெடுக்கும் ஆகாதவைகளை ஒழுத்து போடுங்கள் ( 1 கொரி 3:16,17)
      i. மதுபானம் (நீதி 23:29-32)

ii. புகையிலை
iii. போதை பொருள்
iv. தவறான பழக்கம் வழக்கங்கள்
v. வேசி மார்க்கம் ( 1 தெச 4:3; 1 கொரி 6:18)
vi. மோக இச்சை ( 1 தெச 4:4)

2. **சுய ஒழுக்கத்திற்கு சுயகட்டுபாடு அவசியம் (நீதி 16:32; நீதி 25:28)**
   a. சுய கட்டுபாடு என்பது ஆவியின் கனிகளில் ஒன்றாக இருக்கிறது (கலா 5:23)
   b. சுய கட்டுபாடு என்பது கிறிஸ்தவ வளர்ச்சியில் ஒரு பகுதியாக இருக்கிறது ( 2 பேது 1:5-7)
   c. மாம்ச இச்சைகளை விட்டுவிலக வேண்டும் ( 1 பேது 2:11)
   d. நாவை அடக்குவது மிக முக்கியமானது (யாக் 1:26).

# கடைசியாக

தேவனுடைய மனுஷனாக இருக்க பிரயாசப்படுவோம். இந்த நிலையில்லாத பூமியில் வாழுகிற நாம் நம்முடைய வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுக்க, நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு ஊழியஞ் செய்யவும், அவரை மகிமைப்படுத்தவும் அவருக்கு உண்மையாக வாழ்ந்து, நம்முடைய வாழ்க்கைக்கு அர்த்தம் கொடுப்போம்; இந்த பூமியின் நிறைவில் நம்முடைய எஜமானால் அழியாத கீரிடத்தை பெற்றுக்கொள்வோம்.

**"அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்".**
**மத்தேயு 25:21**